Registered as a Newspaper

தரமான
உதிரிப்பாகங்களைக்
கொண்டு தயாரிக்கப்படும்

நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

# சஞ்சீவி

விலை ரூபா 4-00

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

PUMP
with
Standard Accessories
Select

NEWTONE
Water Pumps

மலை: 3 யாழ்ப்பாணம் விபவ ஆ தை மீ 01 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ. ஆகிர் பிறை 04 (14-01-1989) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 39

## செய்திச் சாரம்

### 6 மாதங்களின் பின் பூசை

திருகோணமலை ஜன 14

கடந்த ஜூலை 22 ஆம் திகதிக்குப் பின்னர் முதல் தடவையாக இன்று திருகோணமலை கோணேசர் ஆலயத்தில் பூசைகள் நடைபெறவிருக்கின்றன.

வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-150)

### பொலிகண்டியில் ஊரடங்கு

சாவெட்டி, ஜன 14

வதிரி, திக்கம், அல்வாய், பொலிகண்டி, கொற்றாவத்தை மற்றும் அதை அண்டிய பகுதிகளில் நேற்று முன்தினம் காலை 6 மணியிலிருந்து மாலை 4மணி வரை உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தது வீடுவிடாகத் தேடுதல் நடவடிக்கையும் இடம்பெற்றது. [உ-70]

### மாங்குளத்தில் தேடுதல்!

மாங்குளம், ஜன 14

மாங்குளம் முல்லைத் தீவு வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை சில மணிநேரம் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன. ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த மோதலில் படையினர் ஒருவர் உயிரிழந்ததாகவும், ஒருவர் காயமுற்றதாகவும்—

இவர்கள் ஹெலிக்கொப்டரில் அழைத்து செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-94)

### டி. ஐ. ஜீ கட்டாய லீவில்

கொழும்பு, ஜன 14

ஜனாதிபதித் தேர்தல் விவகாரத்தில் பொலிஸ் தேர்தல் செயலகத்துக்குப் பொறுப்பாகவிருந்த சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் [illegible]வியோ பெரேரா கட்டாயலீவில் அனுப்பப்பட்டார்.

அவர் மீது விசாரணை ஒன்றுக்கும் பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது. (உ-எ)

### கம்பமடுவில் மோதல்

வவுனியா சம்பமடுப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதலில் ஏழு பேர் அளவில் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

### ஆசிரியர் பட்டியல் வெளியானது

யாழ்ப்பாணம், ஜன 14

சேவைக்கால முன் பயிற்சி பெறவுள்ள 18 பட்டதாரி ஆசிரியர்

(6-ஆம் பக்கம் பார்க்க)

# இன்று முதல் ஊரடங்கு நீக்கம்

## தேவைப்படும் பட்சத்தில் இடவாரியாக அமுலாகும்

யாழ்ப்பாணம், ஜனவரி, 14

**இன்று தைப்பொங்கல் திருநாள் தொடக்கம், யாழ்ப்பாணக் குடாநாட்டில் இதுவரை அமுலில் இருந்த ஊரடங்கு உத்தரவு முற்றாக நீக்கப்படுகிறது.**

ஏதேனும் ஓர் இடத்தில் அசம்பாவிதம் எதுவும் நிகழ்ந்து, அவசியம் ஏற்படும் பட்சத்தில் மட்டும் குறிப்பிட்ட இடத்தில் ஊரடங்கு அமுல் செய்யப்படும்.

பலாலியில் உள்ள இந்திய அமைதிப்படையின் தலைமை அலுவலக வட்டாரங்கள் இந்த விவரங்களைத் தெரிவித்தன.

1987 அக்டோபர் தொடக்கம் குடாநாடு முழுவதிலும் ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டது காலத்துக்குக் காலம் ஊரடங்கு நேரத்தில் சில மாற்றங்களும், தளர்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

ஆரம்பத்தில் நாள் முழுவதும், பின்னர் இரவு நேரங்களிலும் குடாநாட்டில் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டு வந்தது.

இன்று முதல் அது முற்றாக நீக்கப்படுகிறது. மீன் பிடிப்பதற்கு இருந்து வந்த நேரக்கட்டுப்பாடும் இன்று முதல் நீக்கப்படுவது தெரிந்ததே.

கடலில் எல்லா நேரங்களிலும் 10 கிலோ மீற்றர் தொலைவு வரை

(6-ஆம் பக்கம் பார்க்க)

**சுபமுகூர்த்தம்**

14-1-1989
சனிக்கிழமை
தை - 01

சுபநேரம்:
3 34 முதல் 5.04 வரை
ராகுகாலம்:
09.34 முதல் 11 04 வரை
தைப்பொங்கல் திருநாள்

### இன்று கும்பமேளா

புதுடில்லி ஜன 14

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் கும்பமேளா தீர்த்தமாடும் வைபவம் இன்று சனி அலஹாபாத்தில் திரிவேணி சங்கமத்தில் நடைபெறுகிறது.

கங்கா, ஜமுனாவுடன் கண்ணுக்குத் தெரியாத சரஸ்வதி ஆகிய நதிகள் இணையும் திரிவேணிசங்கமத்தில் இன்று சுமார் 40 லட்சம் யாத்திரிகர்கள் தீர்த்தமாடுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ எ)

### இன்று விடுமுறை

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு இன்று உதயன் நிறுவனப் பணியாளர்களுக்கு விடுமுறையாகும்.

ஆகையால் நாளை ஞாயிற்றுக்கிழமை உதயன் நாளிதழ் வெளியிடப்பட மாட்டாது 16.1 89 திங்கட்கிழமை வழமை போல் உதயன் வெளியாகும்.



**பொங்குக பொங்கல்! தங்குக மங்களம்!!**

வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள், அபிமானிகள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் சஞ்சீவியின் பொங்கல் வாழ்த்துக்கள்.

## யாழ் இந்து அருகே சூட்டுச் சம்பவம்!

யாழ்ப்பாணம், ஜன14

ஈ. பி. ஆர். எல். எவ் வின் அரசியல் பிரமுகர் திரு. யோகசங்கரியை நோக்கி யாழ் இந்துக் கல்லூரி அருகே நேற்று நண்பகல் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது

எனினும் அவரும் அவருடன் சென்றவர்களும் காயம் எதுவுமின்றித் தப்பினர்.

கல்லூரிக்குள் சென்றுவிட்டுத் திரும்பியவேளையிலேயே திரு. சங்கரி மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அப்

(6-ஆம் பக்கம் பார்க்க)

## கர்ப்பிணி, மகன் உட்பட மூவர்பலி! ஐவர்காயம்!!

### பண்டத்தரிப்பில் சம்பவம்

யாழ்ப்பாணம் ஜன 14

பண்டத்தரிப்பு சந்தியருகே கீரிமலை வீதியில் நேற்று பிற்பகல் 2 15 மணியளவில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றை அடுத்து 3 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் ஐந்து பேர் காயமடைந்தனர்.

கர்ப்பிணிப் பெண்ணான ஜீவநாயகம் ஜெயா (21 வயது) அவரது மகன் ஜீவநாயகம் நிக்கர்ஸ் (3 வயது), ரீட்டா குமுதினி (10 வயது) ஆகியோரே உயிரிழந்தனர்.

இக் கர்ப்பிணிப் பெண்ணின் கணவர் அன்ரன் ஜீவநாயகம் (23 வயது). அவரது சகோதரி ஞேஸ் மலர் (19 வயது), அமிர்தநாயகம் (30 வயது), த. தேவராஜா (28 வயது), ஜெனு (17 வயது) ஆகியோரே காயமடைந்தனர்.

மோதல் சம்பவத்தின் போது வேறு சிலரும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## பிரதான மின் இணைப்பு வடக்கிற்கு கிடைத்தது

யாழ்ப்பாணம், ஜன 14

தேசிய மின் தாங்கும் கம்பிகளுடன் (National grid) வடபகுதிக்கான மின்சார இணைப்பை ஏற்படுத்தும் திருத்த வேலைகள் நேற்று முன்தினம் முடிவுற்றன.

இதனால் பிரதான மின் இணைப்பு ஊடான மின்விநியோகம் குடாநாட்டிற்குக் கிடைத்திருக்கிறது.

இவ்வாறு இலங்கை மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

தேசிய மின்தாங்கும் கம்பிகளுக்கும் வடபகுதிக்கான இணைப்புக்களுக்கும் இடையில் ஏற்பட்ட கோளாறுகளினால் வடபகுதிக்கான பிரதான மின்சார விநியோகம் தடைப்பட்டிருந்தது.

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்துடனான இணைப்பின்மூலம் கிடைக்கும் மின்சாரத்தைக் கொண்டு ஓரளவு தடையின்றி இரவு நேர மின்சார விநியோகத்தை கடந்த திங்கட்கிழமைமுதல் நேற்றுவரைமேற் கொள்ளக்கூடியதாக இருந்தது என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஓ 5)

### மின்வெட்டு வேளையில்

## பாரிய மினகம்பிகளை சுருட்டிய பலே திருடர்கள்!

யாழ்ப்பாணம், ஜன 14

மின்வெட்டு ஏற்பட்டிருந்த காலத்தில் வட்டுக்கோட்டைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் ஆறு மைல் நீளமான 33 கிலோ வோல்ட் பாரிய மின்கம்பிகள் களவாடப்பட்டிருக்கின்றன.

இதனால் இலங்கை மின்சார சபைக்கு 10 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து வட்டுக்கோட்டைப் பகுதிக்கு மின்சார விநியோகத்தை மேற்கொண்டுவந்த 33 கிலோ வோல்ட் மின்கம்பி இணைப்பு சோம்பையன் மணல் மயானப் பகுதிக்கு அப்பால் காணமல் போயிருக்கிறது.

கடந்த சில வாரங்களாக இந்த மின்கம்பிகளால் மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே மின்கம்பித் திருட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

### சிதம்பராவும் ஒப்படைக்கப்படும்

வல்வை, ஜன 14

வல்வை சிதம்பராக் கல்லூரியும் மிகவிரைவில் கல்லூரி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது

கல்லூரி இயங்கத் தொடங்கியதும் கல்லூரி வளவில் தற்போது செயற்பட்டு வரும் பொலீஸ் நிலையம் வேறு ஒரு இடத்திற்கு மாற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-160)

## சிங்கள வித்தியாலயம் மாகாணசபையிடம்

திருகோணமலை, ஜன 14

திருமலை, உள்துறை வீதியில் சிங்கள மத்திய மகாவித்தியாலயம் அமைந்துள்ள காணியையும் அதில் உள்ள இருமாடிக்கட்டடத்தையும் வடக்கு- கிழக்கு மாகாணசபையிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்த மகாவித்தியாலயம் 1987 செப்டம்பருக்குப் பின்னர் இயங்கவில்லை.

இங்கு கல்வி கற்ற

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஜே.வி.பி. தாக்குதல்கள் மீண்டும் தெற்கில்

கொழும்பு, ஜன 14

தென்பகுதியில் ஜே. வி. பி. இயக்கம் மீண்டும் தாக்குதல்களை ஆரம்பித்திருப்பதாகக் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது என பி.பி.ஸி நேற்று மாலை அறிவித்தது.

இந்திய அமைதிப்படையினரைத் திருப்பி அனுப்புவது குறித்து ஜனாதிபதி பிரேமதாசா நிர்வாகம் காட்டும் போக்குக் குறித்துஜே.வி.பி அதிருப்தி அடைந்திருப்பதாகத் தெரிகிறது என்றும் பி.பி.ஸி. வானொலி மேலும் தெரிவித்தது.

இதேசமயம் தெற்கில் அம்பாந்தோட்டையில் கார் ஒன்றின் மீது இனந்தெரியாதோர் நடத்திய குண்டு வீச்சில் காரில் இருந்தவர்கள் இரண்டு பேர் உயிரிழந்தனர். (உ-எ)

## மெதடிஸ், ஹாட்லிக்கு ரூ.2கோடி 20லட்சம்நிதி

கரவெட்டி, ஜன. 14

பசுதமுற்றிருக்கும் ஹாட்லிக் கல்லூரியின் கட்டடங்களைச்சீரமைக்க 1 கோடி 20 லட்சம் ரூபாவும், மெதடிஸ்த மகளிர் கல்லூரியைச் சீரமைக்க ஒரு கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கி இந்நிதியைஒதுக்கி வருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-70]

**தை பிறந்தால் வழி பிறக்கும் தங்கமே தங்கம்!**

**உங்கள் வாழ்வில் வளம் பிறக்க இன்பப் பொங்கல் பொங்கிடுவீர்!**

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்க்ள் அனைவருக்கும்

**எமது பொங்கல் வாழ்த்துக்கள்**

**ஷீரு**

207, மின்சாரநிலையவீதி,
யாழ்ப்பாணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

குளிர்சாதனப் பெட்டி, தளபாடங்கள் கட்டில், 8' Show Case, கண்ணாடி மேசை, நிலக்கவுண்டர், Gorn Safe, செற்றி, Mixer, Toaster, கபேட், Oven, மற்றும் பல பொருட்களும் மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. 343, பருத்தித்துறை வீதி நல்லூர் (அரசடி சந்தியருகில்) (8956)

பருத்தித்துறை டவ் நிலையத்துக்கு அருகாமையில் 2 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு. ந. அம்மைப்பிள்ளை வி.எம். றோட், பருத்தித்துறை. (8952)

[1] தெல்லிப்பளை மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கும் K. K. S. வீதிக்கும் அண்மையாக 12 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு. [2] யாழ்ப்பாணம் கண்டுக்குளி, கோவில் வீதி லேனில் 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: J. P. T. Ltd 3, நவீனசந்தை. (மேல் மாடி) யாழ்ப்பாணம். (8884)

5 மாத அழகிய பெண் பொமனேரியன் நாய்க்குட்டி, அடை வைப்பதற்கு ஏற்ற வான்கோழி முட்டைகள், P. V. நல்லெண்ணெய் ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பி. விமல், C/o K. அன்னலிங்கம், கலட்டி ஒழுங்கை; கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் 8885)

பாவித்த பெரிய கட்டில், மெத்தை, கண்ணாடி அலுமாரி, குசினி பொருட்கள், மேசைகள், சின்னக்கட்டில், ஸ்கிறீன், கபேட் மற்றும் பொருட்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு; 14/2, பிலச்சர் லேன், கண்டுக்குளி. (8883)

மல்லாகம நீலியம்பனை பிள்ளையார் கோயில் அருகாமையில் உள்ள 4½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- செ மாணிக்க சுந்தரம், கோணபுலம் வீதி, மல்லாகம். (8872)

டி. வி. டெக்செட், கைத்தையல் மெஷின், படிக்கும் மேசை செட், நுளம்பு வலைகள், ஆங்கில அகராதிகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்கள் உடன் விற்பனைக்கு உண்டு. 121, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (8871)

### கோழிக்குஞ்சு விநியோகம்

**Uplands Farm** (Dekalb) இன பிறவுண் பேட்டுக் குஞ்சு பிறவுண் சேவல் குஞ்சு, கறுப்பு (பிளிமத்) புள்ளி சேவல் (Cobb) இன புரொயிலர் குஞ்சு (28-1-89) சனிக்கிழமை விநியோகிக்கப்படும் சொண்டு வெட்டப்பட்டது (மரெக்ஸ்) தடுப்பூசி போடப்பட்டது முன்கூட்டியே பதிவு செய்க. இல 9, கந்தையா லேன், (சுராவத்தை றோட்டு) கன்ளுகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) [8877]

புரொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். பதிவு செய்க. சற்குணராஜா அன் பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (8755)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை, சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவற் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், Hyline கறுப்பு, வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள், ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்றர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (8546)

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற் கோழிகள், சூப் குஞ்சுகள், விருந்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும் Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்றர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (8547)

### வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி கண்டி வீதியில் பழைய பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் இருமாடிக்கட்டிடம் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவபதி, கண்டிவீதி, சாவகச்சேரி, அல்லது "ஈஸ்வரி ரெக்ஸ்" 8. நவீன சந்தை, சாவகச்சேரி. (8857)

## தேவை

மின்தறி நிலையத்திற்கு அனுபவம்மிக்க பெண் நெசவாளர். விபரத்துடன் தேவை. திங்கள் காலை 9-00 மணிக்கு நேரில் வரவும். தங்குமிட வசதியுண்டு. ஸ்ரீராஜ் ரெக்ஸ் இண்டஸ்ரீஸ், வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தங்கேணி. (8875)

சுயதொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 50 வயதுடைய படித்த உயர் குலத்தவரின் நலன்களைக் கவனிப்பதற்கு ஏற்ற ஒரு பெண் தேவை. சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும். 426, மே/பா உதயன். (6861)

எங்கள் ஸ்தாபனத்திற்கு போட்டோஸ்ரட் பிரதிகள் எடுப்பதற்கு பெண் பிள்ளை தேவை. உடனடியாக விண்ணப்பிக்கவும். விஜய லங்கா என்ரபோட்ஸ் அன் கொன்ராக்ஸ் கம்பனி, பருத்தித்துறை வீதி, கோப்பாய். (8886)

யாழ் நகரில் உள்ள பான்ஸி கூட்ஸ் ஸ்தாபனத்திற்கு 15 வயதுக்குட்பட்ட ஆண் விற்பனையாளர் தேவை. தொடர்பு:- 433 C/o உதயன் யாழ்ப்பாணம். (8888)

Fitters, Fitters Helpers இன்ஜினியரிங் அப்பிரண்டிஸ் (வேலை பயிலுனர்) உடன் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; சாரதா என்ஜினியர்ஸ், 526. ஓட்டுமடம் சந்தி, யாழ்ப்பாணம். (8683)

G. C. E. (O/L) வரை படித்த 31 வயது நிரம்பிய சைவ போசனப் பெண்ணுக்கு தகுந்த வரனைத் தேடுகின்றார்கள். சீதனம் பேசித் தீர்மானிக்கப்படும். விபரங்களுக்கு 423, C/o உதயன். (8854)

### தேவை

பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு கனரக வாகனம் செலுத்தக் கூடிய நற்குண ஒழுக்கமுள்ள 40-50 வயதிற்குட்பட்ட சாரதி உடன் தேவை. மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது சம்பளம் நேரில் பேசிக் கொள்ளலாம். விபரங்களுக்கு விளம்பர இல: 431, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [C-1300]

### உடன் தேவை

வீடியோ படப்பிடிப்பில் அனுபவமுள்ளவர் உடன் தேவை. திறமைக்கேற்ப (மாதச்சம்பளம்) வழங்கப்படும் மிக்சரும் போடக்கூடிய வராய் இருந்தால் நல்லது. (சம்பளம்) 1500/- மேல் கொடுக்கப்படும் நேரில் பேசிக்கொள்ளலாம் நீகல் வீடியோ. ஈச்சமோட்டை பீச் றோட், யாழ்ப்பாணம். [8879]

### அறிவித்தல்

காங்கேசன்துறை புகையிரத ஓட்டகசாலை சித்தி விநாயகர் ஆலய சட்டிட நிதிக்காக அதிஷ்ட லாப சீட்டு தவிர்க்க முடியாத காரணத்தால் பின் போடப்பட்டுள்ளது. அச்சீட்டிழுப்பு மீண்டும் தீபாவளியன்று (27-10-1989) திகதி அதிஷ்டம்பார்க்கப்படும் என்பதை மிகவும் பணிவன்புடன் எம் மக்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இப்படிக்கு ஆலய நிர்வாகித் தருமபாலா. (8878)

### சுஜேரா ரவல்ஸ்

சமையல் வேலைகள் பைப்வேலைகள் தெரிந்தவர்கள் சவுதி அரேபியா [Saudi Arabia] வில் தேவையாக இருக்கிறது. 15 1 89க்கு முன்னர் சுஜேரா ரவல்ஸ் இல 21, வேம்படி றோட், யாழ்ப்பாணம். என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். ஹோட்டல் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்தோர் விரும்பப்படுகின்றனர். ஆங்கில அறிவுடையவர்களாயும் இருத்தல் வேண்டும். (C/1325)

### ஜோதிடம்

தை பிறந்தால் வழி பிறக்கும் புத்தாண்டுப (1989) பலன்கள் எல்லா இராசிகளும் விலை 3.75 எங்கும் கிடைக்கும். நூலாசிரியர் (ஆத்ம ஜோதி) சத்தியதாசன் விநியோகஸ்தர்கள், ராஜன் புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் (8689)

### தொழிற்கல்வி

வெளி நாடுகளில் பிரபல்யமான தொழில் வாய்ப்புக் கல்வி Radio Officers (Ship) (P M G) Telex International Operators (இருபாலாரும்) சான்றிதழ் வழங்கப்படும். ஆரம்பம்; 20-1-1989 சுய விலாசமிட்ட முத்திரையுடன் விண்ணப்பிக்கவும். Keen - Thirunelvely. (8962)

### சேவை

தமிழ், சிங்கள தட்டச்சு வேலைகள் சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக் கொள்ளவும். எலக்ரோனிக் ரைப்பிங் மூலம் வெளிநாட்டுக் கடிதங்கள் BioDataபோன்ற முக்கிய பிரதிகள் கண்ணைக் கவரக்கூடிய ஆங்கில எழுத்துக்கள் மூலம் செய்து கொடுக்கப்படும். "ஷப்ரூ" சேவைப் பிரிவு இல 19, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (C/1271)

### ரோணியோ

தரமான ரோணியோ பிரதிகளை தமிழ் ஆங்கிலம் சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்: "ஷப்ரூ" சேவைப்பிரிவு இல 19, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (C/1272)

## வகுப்புகள்

### A/L 89 இரசாயனம்

108 Brown Road A/L 89 இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் புதிய பிரிவு ஆரம்பம்; (15-1-89) ஞாயிறு 12-30 p m Organic and Inorganic (சனி, ஞாயிறு 12-30 p m to 2-30 p m) பௌதிக இரசாயனம் ஆரம்பம் 17-1-89 செவ் 6 45 a.m (செவ், வியா, 6-30 a m to 8-15 a m நேரில் விபரங்கள். [8870]

### வர்த்தகம் A/L 89/90

இ. இரட்ணம் ஆரம்பம் 90-ஞாயிறு 14-1-89 4-00 மணி 89 வினா விடை வகுப்பு ஞாயிறு 5-00 மணி 211/21, கோயில் வீதி, நல்லூர். [8881]

### ஆங்கில / சிங்கள வகுப்புகள்

Spoken with Grammer I. E. T. கல்வி ஸ்தாபனத்தில் நடை பெறுகின்றது மாநகர சபை எல்லைக்குள் உள்ள தனியார் கல்வி ஸ்தாபனங்களும், தனிப்பட்டவர்களும் விண்ணப்பிக்கலாம் I. E. T கல்வி ஸ்தாபனம், 11 B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [விவேகானந்தா அச்சகத்திற்கு எதிர் மேல் மாடி.) (8860)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**கு. பரராசசிங்கம் இராசவல்லவன்**

தோற்றம்: 24 - 04 - 1911

மறைவு: 15 - 01 - 1988

திதி: 02 02 - 1989

எங்கள் குடும்பத்தின் திருவுருவாய், அறிவின் சுடரொளியாய் பாசத்தின் பிறப்பிடமாய் எமக்காக வாழ்ந்து எம்மை சிறப்புடன் வாழவைத்து ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டசென்ற அன்புத்தெய்வமே! உமது ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

மனைவி பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள்.

விதானை வழவு, மானிப்பாய். (8957)

### காணவில்லை

1 ? 70V110 இலக்கமுடைய சைக்கிள் 10-1-89 செவ்வாய்க்கிழமை காலைசாவகச்சேரி நவீன சந்தை கிழக்குப் பகுதியில் பொருட்களுடன் காணாமல் போய் விட்டது. இது பற்றிய விபரம் தெரிந்தவர்கள் ஆ. இராசையா, நீர்வேலி வடக்கு, நீர்வேலி முகவரியுடன் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும். (8887)

### தவறிவிட்டது

சந்திரகுமாரி அல்பிரட் ஆகிய எனது அடையாள அட்டை இல. 556941440 V, பாஸ்போட் என்பன அடங்கிய பை 9.1 1989 அன்று கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் வரும் C. T. B. பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்கவும். (8700)

## பொங்கல் வாழ்த்துக்களுடன் உஷா சினிமாவின் இன்றைய புதிய வெளியீடு

ரகுவரன் - நிஷாந்தி - செந்தில் S.S. சந்திரன் நடித்த

**என்வழி தனிவழி**

(ஒறிஜினல் பிரதி)

உஷா சினிமா
162, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (8964)

## எமது வாடிக்கையாளர்களுக்கு!

தமிழர் திருநாள் தைத்திருநாள் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்

**வ. வடிவேல்**
(லங்கம் பிராந்திய விநியோகஸ்தர்)
21/-, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


எம்மிடம் பொங்கலை முன்னிட்டு

**LANKEM**

விவசாய இரசாயனங்கள் (மருந்துகள்)
கைத்தொழில் இரசாயனங்கள்
ROBBILAGE PAINTS
ISLAND CONSUMER SUPPLIES
நுகர்ச்சிப் பொருட்கள்
பவர் SPRAYERS
பவர் உரலைகள்
சிங்கர் SPRAYERS
சிங்கர் தராசு
நீர் இறைக்கும் இயந்திரங்கள்

விசேட கழிவுகள் மூலம் விற்பனவு செய்யப்படும். (C/1131)

## ஓராண்டு நினைவு அஞ்சலி



மண்ணில்:- 19-09-1948

விண்ணில்:- 25 01-1988

திதி:- 14-01 1989

**பண்டாரி - கதிரவேலு**
(சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க இளைப்பாறிய முகாமையாளர்)

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்
உங்கள் பிரிவால் துயருறும்:
அன்புமனைவி;- சந்திராவதி,
பிள்ளைகள் தயாழினி, நிவாஸ்,
தாய், சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர், மற்றும் உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

மாதுளை மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (9153)

## பிரயாண ஒழுங்கு

1. Chief officer } Salary open
2. Second Engineer }
3. Cooks— 300 USD
4. AB— 300 USD

5. தச்சுவேலையாட்கள் 800SR
6. மேசன்— 700SR
7. குவைற்— கிளினேர்ஸ் 35KD

ஞாயிறு, திங்கள் (15ஆம், 16ஆம் திகதி) காலை 10 மணிக்கு முன் சந்திக்கவும்.

**சிவா மாஸ்ரர்**
தொழில் ஆலோசகர்,
ஏழாலை தெற்கு. (C/1329)

யாழ் ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவில்

## முறைப்பாடுகளை பதிவதில் அரச ஊழியர் அக்கறை

யாழ்ப்பாணம் ஜன 14

யாழ் பொலிஸ் பிரிவில் முறைப்பாடுகளைப் பதிவு செய்து கொள்வதில் அரச ஊழியர்கள் பெரிதும் அக்கறை எடுத்துள்ளனர்.

இரண்டு வருட கடன் விண்ணப்பத்துக்கு பொலீஸ் முறைபாட்டுப் பிரதியும் கோரப்பட்டிருப்பதன் காரணமாகவே அரச ஊழியர்கள் பொலீஸ் பிரிவுக்கு படை எடுத்து வருகின்றனர்.

தினமும் நூற்றுக்கணக்கான முறைப்பாடுகள் யாழ். பொலீஸ் பிரிவில் பதியப்படுகின்றன.

இவை இரண்டு நாட்களின் பின் பொலீஸ் உயர் அதிகாரியினால் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு பிரதிகள் வழங்கப்படுகின்றன [ஒ-10]

சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் [வ. உ]

## வெற்றுச் சாக்குக் கேள்வி விண்ணப்பம்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தரம் பிரிக்கப்பட்ட 5,000 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்குண்டு. வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்தி விண்ணப்பப் பத்திரத்தை சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் பத்திரத்தைப் பூர்த்தி செய்து தபால் உறையின் இடது பக்க மூலையில் வெற்றுச் சாக்குக் கேள்வி என எழுதப்பட்டு "பொது முகாமையாளர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை" என்ற முகவரிக்கு 20-1-89 ஆம் திகதி நண்பகல் 12 00 மணிக்கு முன்பதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
சங்கானை ப. நோ. கூ. சங்கம்

13-01-1989. (C/1132)

## NEW SCIENCE ACADEMY

B. M. C. முன்பாக JAFFNA

WEEKEND CLASS

**A/L 89**
**Physics**

துரித மீட்டல் வினாவிடை வகுப்பு
[ அலகு அலகாக நடைபெறுகின்றது ]
By
**S. சோதிலிங்கம். B.Sc. (Special)**
Sat, Sun — 1. 30 p m

1. பிரயோக கணிதம்
(i) நிலையியல் - காவிகள் பிரயோகம் தேற்றம்
(ii) அடுத்த பகுதி:- ஒரு தளவிசை
2. தூய கணிதம்
(i) வட்டம் நடைபெறுகிறது
(ii) அடுத்த பகுதி:- பரவளைவு

ஆசிரியர்;
**வெக்டர் வேலாயுதம்**
Sat, Sun — 2. 30 - 4. 30 p. m (C/1338)

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

எமது
பொங்கல் வாழ்த்துக்கள்

## புதிய பிரிவுகள்

நாளை குதூகல ஆரம்பம்

**May 89 Exams**

* C. I. M. A.
* A. A. T.

குறிப்பு: திரு. V. கருணநிதி உட்பட எமது விரிவுரையாளர்கள் எமது ஸ்தாபனத்தில் மாத்திரமே கற்பிப்பார்கள்

**RAPID RESULTS INSTITUTE**

212, கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(8697)


## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## Hindu Board of Education

சைவ வித்தியாவிருத்திச் சங்கத்திற்குச் சொந்தமான ஆதனங்கள் இலங்கையில் பல பாகங்களில் இருந்தன. அவைகளில் பல அரசாங்கத்தால் 1962ஆம் ஆண்டில் சுவீகரிக்கப்பட்டுள்ளன சுவீகரிக்கப்படாமல் எஞ்சியிருக்கிற ஆதனங்களின் பட்டியல் தயாரிப்பதற்காகவும் அவைகளின் ஆட்சியை மீளப் பெறுவதற்காகவும் பொது மக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாடுகின்றோம். இவ்வாதனங்கள் நம்பிக்கைச் சொத்தாதலினல் ஆட்சிஉரிமை பெற இயலாது.

ஆகவே மேற்படி ஆதனங்களின் விபரங்கள் தெரிந்தவர்கள் சங்கக் காரியாலயத்துடன் நேர்முகமாகவோ அல்லது கடித மூலமாகவோ தயவுசெய்து தொடர்பு கொண்டு முழுவிபரங்களையும் தரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவ் நம்பிக்கைச் சொத்துக்கள் திருநெல்வேலி இந்து சிறுவர் நிறைவாழ்வு இல்லத்தின் நன்மைக்கு அவசியம் தேவைப் படுகின்றன.

- தலைவர்

கலாசாலை வீதி,
திருநெல்வேலி. (C/1125)

## தை மாத குளிர்த்தி

அராலி, ஜன 14

அராலி ஆவரப்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதனல் விசேஷ உற்சவங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

ஆனல் தைமாதக் குளிர்த்தி வழமைபோல் நடைபெறும் என்று இக் கோயிலின் பரிபாலன சபையினர் அறிவிக்கின்றார்கள்.

இம்மாதம் 28 ஆம் திகதி நடைபெறும் குளிர்த்தியில் கலந்து அம்பிகையின் அருளைப் பெற்றுய்யுமாறு அவர்கள் பத்தர்களைக் கேட்டுக்கொள்கின்றார்கள் (க-12)

## மகரவிளக்குப் பூசை

யாழ்ப்பாணம், ஜன 14

சுருவில் ஐயனர்கோயிலில் இன்று தைப்பொங்கல் நாள்மாலை மகர விளக்குப்பூசை நடைபெறுகின்றது

சிவஸ்ரீ சோ. நடராசாக குருக்களும் சிவஸ்ரீ ந. யோகானந்தக் குருக்களும் மகர விளக்குப் பூசையை நடத்துவார்கள். (ச)

## கோப்பாயில் மாதிரி வீடுகள்

ஐக்கிய நாடுகள் அகதிகள் புனர்வாழ்வுஸ் தானிகராலயத்தினல் (UNHCR) இரண்டு மாதிரிவீடுகள்கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைக்கப்பட்டு வருவதாக கோப்பாய் பகுதி வீடமைப்பு உத்தியோகத்தர் திரு. எஸ். நாகேஸ்வரன் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து அகதிகளாக திரும்பிய வீடு இல்லாதவருக்கும் அண்மைய அசம்பாவிதங்களின்போதுவீடு முற்றாக சேதமடைந்தவர்களுக்கும் இவ்வாறான வீடுகள் மேலும் அமைக்கப்பட இருப்பதாக அவர் தெரிவித்தார். (க-72)


## அகில இலங்கை
## பரஸ்பர சகாயநிதிச் சங்கம்

அங்கத்தவர்களும் ஊழியர்களும்நமது உள்ளம்நிறைந்த
மங்கலப் பொங்கல் வாழ்த்தை

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள் எம்
கையை நம்பி நாம் வாழ்ந்தால்
பை நிறையக் காசு வருமடா தம்பி
வையகமும் உன்னை என்றும் போற்றுமடா தம்பி.

என்னவர்கள் பட்ட கஷ்டம் சொல்லிலடங்கா
என்னவர்களுக்கு உதவ யார் யாரோ வந்தார்கள்
பின்னவர்கள் செய்ததையும் நீயறிவாய் தம்பி
உன்னவர்கள் வாழ உன்னை ஓங்கவேண்டுமடா.

உன்னை ஓங்கவைக்க உனக்கொரு சங்கம்
உன்னவர்கள் உரமேற்றி வளர்த்த நற் சங்கம்
பன்னெடுங்காலம் பகைவளர்க்காது வளர்ந்து வரும் சங்கம்
இன்முகத்தோடு இன்றே சேர் உன் இனம் வாழ
என வாழ்த்துகின்றார்கள்.

பிரவேசம் - ரூபா 120/- மாதாந்தம் - ரூபா 20/-

மக்களால் மக்களுக்காகவே முப்பத்தொரு வருடங்களாக நடத்தப்படும் ஒரே ஒரு சங்கம். எமது இலச்சினை தேன் கூடு எமது தாரக மந்திரம் ''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு''. தேனீயைப் போல் எமது சங்கத்தில் சேர்ந்து எமக்காகவும், எமது இன மக்களுக்காகவும் வாழ்வோம் எனத் திடசங்கற்பம் பூண்டு நன்றே சிந்தித்து இன்றே தீர்மானியுங்கள் இச் சங்கத்தில் சேர்வது என்று.

விபரங்களுக்கு உடனே தொடர்பு கொள்ளவும்:-

பொது முகாமையாளர்,
அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம்,
தபாற்கந்தோரடி, வட்டுக்கோட்டை.

* விரைவில் எதிர்பாருங்கள் * யாழ் நகரில் எமது கிளை
* உங்கள் நன்மைக்காக.

வட்டுக்கோட்டை, (C/1270)

இ. புவனசிவரன்,
(தலைவர்.)



+
J. M J

உங்கள் பயண அமைப்பாளர்

# S. P. ANTON

மகிழ்ச்சியுடன் வழங்கும்
நற் செய்தி

## யோர்தான்

யோர்தான் நாட்டில் பண்ணைத் தொழிலாளர்களாகவும் உதவியாளர்களாகவும்
**FARM WORKERS AND GENERAL HELPERS**
பணியாற்றுவதற்கு உடனடியாக ஒழுங்குகள் செய்து தரப்படும்.

வளமிக்க யோர்தான் நாட்டில் சிறந்த சம்பளத்துடன் பணிபுரிய

**அரியதோர் சந்தர்ப்பம் இது!**

முதற்குழுவில் இருபது பேர் அடுத்த இருவாரங்களுக்கிடையில் பயணம் மேற்கொள்ளவிருக்கிறார்கள்.

சம்பளம்:
600- 800 அமெரிக்க டொலர்கள்

**இரண்டு வருட ஒப்பந்தம்**

அமெரிக்க நிர்வாகிகளின் தலைமையில் இயங்கும் ஸ்தாபனம்.

மற்றும்

சகல விபரங்களுக்கும் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் பயண அமைப்பாளர்:

# எஸ். பி. அன்ரன்

No. 648, 1/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)

(C/1266)



# WALK IN INTERVIEW
# 5 STAR HOTEL

**Saudi Arabia**

Immediate Vacancies age - 21-40 years, Interview will be held in Colombo from 17. 1. 89 onwards.

English Speaking
Hotel Waiters - Males only

## VACANCIES IN SAUDI ARABIA

| | | SALARY |
|---|---|---|
| 1. | Pipe Fitter Foreman | SR 800 |
| 2. | Sewage Water Treatment, Plantforeman | SR 800 |
| 3. | Pipe Line Supervisor | SR 1200 |
| 4. | Sewage Water Treatment, Plant Operator | SR 650 |
| 5. | Saftey Engineer | SR 1300 |
| 6. | Pipe Fitter | SR 650 |
| 7. | Heavy Duty Equipment Operator | SR 700 |
| 8. | Steel Fixer | SR 700 |
| 9. | Sheet Fixer | SR 700 |
| 10. | Mason | SR 650 |
| 11. | Carpenter | SR 650 |
| 12. | 300 Cleaners | SR 400 |
| 13. | Welders | SR 650 |

சவூதிக்கு நேர்முகப் பரீட்சை:-
13, 14, 15, 16.1.89 வரை நடைபெறும்.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் கொடுக்கவேண்டும். எனவே எம்முடன் கடவுச்சீட்டு. 3 போட்டோக்கள், தொழில் அனுபவச் சான்றிதழ்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.
31 1. 89 இவர்களுக்கு வெளிநாட்டுப் பிரயாணம் நடைபெறும்

குவைற் நாட்டில்
**வேலை வாய்ப்பு**

500 தொழிலாளர்கள்
சம்பளம் 35 KD
உணவு இல்லை.
தங்குமிடம் அளிக்கப்படும்
வயது - 18 — 48 வரை

# T. V. TRAVELS
BROWN ROAD,
KOKUVIL.
(Railway Station Front)

(C/1293)



அன்பர்கள்
ஆதரவாளர்கள்
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
எங்கள் அன்பு கலந்த
பொங்கல் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

# சாந்தி அச்சகம்

575, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23002

C/1315


## Vacancy - Resident Director
## Youth Training Centre, Paranthan

Project of The National Council of YMCAs managed by Jaffna YMCA

**Qualifications** - Diploma in Agriculture with 5 years experience in Farm Management, Community Development and Preferably training of youth with working knowledge in all three languages.

**Salary** - Not Less than Rs 3000/- per month/negotiable
Official quarters provided

**Applications Close** - with General Secretary, Y. M. C. A. Jaffna on 25 1 89
Forms obtainable from Jaffna YMCA

(8676) National General Secretary


ரீவி, டெக், குளிரூட்டி, குளிர்சாதனப் பெட்டிகள் பழுது பார்ப்பவர்களும்
புதிய பழைய சினிமாப் பாடல்கள், பக்திப் பாடல்கள் பதிவு செய்து கொடுப்பவர்களும்

● ELECTRO - REF - COOL - ENGINEERS ●

K. K S. வீதி, கொக்குவில்.

வாடிக்கையாளர்களுக்கு எமது உளம்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்

(C1305)



தித்திக்கும் திருநாளாம் தைப்பொங்கல் நாளாம். தமிழினத்தின் நன்னாளாம்.

எம் அன்பான தமிழ் மக்களுக்கு எமது தமிழ் **பொங்கல் நல்வாழ்த்துக்கள்.**

# S. P. அன்ரன்

கிளை:— யாழ்ப்பாணம். கொழும்பு.

(C1276)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனங்களுக்கான
## தகுதிச் சான்றிதழ் வழங்கல்
## FITNESS CERTIFICATES FOR MOTOR VEHICLES

1989 ஆம் ஆண்டுக்கான வாகன லைசென்ஸ் பெறுவதற்குத் தேவையான வாகனப் பரிசோதனையும், சான்றிதழ் வழங்குதலும் எமது கீழ்க்கண்ட புதிய முகவரியில் நடைபெறுகின்றன என்பதை வாகனச் சொந்தக்காரர்களுக்கு அறிவிக்கின்றோம்

**டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்**

10, குறேசெற் ஒழுங்கை, (கச்சேரி - நல்லூர் வீதி)
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(கச்சேரியிலிருந்து 200 யார்) (C/1289)

---

+
J. M. J.

அன்றும்!
இன்றும்!!
என்றும்!!!

உங்கள் பிரயாண ஒழுங்குகளை நம்பிக்கையுடனும் பாதுகாப்புடனும் வகுத்துத் தருவதில் வல்லவர்கள் என்ற பெயர் பெற்ற

## உங்கள் பயண அமைப்பாளர்
## எஸ். பி. அன்ரன்

வழங்கும் நற்செய்தி!

★ புதுவருடத்தில் ★

★ ஜெர்மனி
★ பிரான்ஸ்
★ சுவிஸ்
★ இத்தாலி
★ அவுஸ்திரேலியா

ஆகிய நாடுகளுக்கு நீங்கள் பத்திரமாகவும் நம்பிக்கையாகவும் பயணம் செய்வதற்கு நிச்சயமான பயண ஒழுங்குகளை அமைத்துத் தருகின்றோம்.

மேலும்

★ யோர்தான்
நாட்டில் விவசாயப் பணியாட்களாக.
(Farm Helpers)

★ சவூதி அரேபியா
நாட்டில் சுத்திகரிப்பு பணியாட்களாகவும்
Cleaners ஆகவும் பணியாற்றுவதற்கு

வேண்டிய உடனடிப்பயண ஒழுங்குகளைச் செய்து தருகிறோம்.
மேலும் விபரங்களுக்கு உடனடியாக நேரில்
தொடர்பு கொள்ளுங்கள்:

## எஸ். பி. அன்ரன்
**No. 648 1|3, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

ஒரு மகிழ்ச்சியான செய்தி!

சவூதி அரேபியாவில் பணியாற்றி விட்டு நாடு திரும்பியுள்ள அன்பர்கள் தங்கள் சவூதி இன்சூரன்ஸ் GOSI. பணத்தைத் திருப்பிப் பெறுவதற்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது இதற்கான படிவத்தை எமது அன்பர்களுக்கு வழங்குகிறோம். தேவையானவர்கள் எமது யாழ் அலுவலகத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.
(C-1263)

---

## SPACE AVAILABLE
NEW BUILDING
WITH ALL FACILITIES
1st FLOOR
2nd FLOOR
Each floor approximately 700 sq. Feet, situated at Hospital Road,
(Closer to Bus stand)
Apply No: 25,
C/o. Uthayan, Jaffna
(8681)

---

## தேவை

யாழ்ப்பாணம் இந்து வேளாள குடும்பத்தைச் சேர்ந்த விவாகரத்துச் செய்த சவுதி அரேபியாவில் பணிபுரியும் 40 வயதுடைய மணமகனுக்கு அதே இனத்தைச் சேர்ந்த படித்த மணமகள் தேவை. (விவாகரத்துச் செய்தவராயினும் கவனிக்கப்படும்.) புகைப்படம் அடங்கிய முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். (கொழும்பில் தொடர்பு கொள்ளக்கூடிய முகவரி இருப்பின் குறிப்பிடவும்

தொடர்பு: 429, C/o. உதயன்
(C/1283 யாழ்ப்பாணம்

---

உ
அம்பாள்துணை

## கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வழிபடுவோர் சங்கர்
1989

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரினால் மேற்படி ஆலயத்தின் பிணக்குகளையும், சச்சரவுகளையும் விசாரணை செய்து தீர்ப்பு வழங்கும்படி அறிவுறுத்தப்பட்டு 30 8-1988-ல் AE/TRUST/268 ஆம் இலக்கக் கடிதப்படி நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவைச் சார்ந்த நாங்கள் மேற்படி ஆலய பரிபாலனசபையினரையும் வழிபடுவோர் சங்கத்தினரையும் அழைத்து தீர விசாரணை செய்ததன் விளைவாக இருசாராரும் இணங்கிக்கொண்டதற்கமைய ஒரு பொதுக் கூட்டத்தைக் கூட்டிப் புதிய நிர்வாகம் ஒன்றினை அமைக்கவுள்ளோம் இதன் பொருட்டு நாம் தயாரிக்கும், புதிய யாப்பிற்கு அமைய மேற்படி ஆலயத்தின் வழிபடுவோர் சங்கத்திற்கு உறுப்பினர்களைச் சேர்க்கவுள்ளோம்.

இதற்கமையத் தமது அங்கத்துவத்தைப் புதுப்பிக்க விரும்பும், புதிய உறுப்பினர்களாகச் சேரவிரும்பும் கீழ்காணும் தகைமையுள்ள சகல வழிபடுவோரும் தமக்குரிய அங்கத்துவப் படிவத்தை எங்களிடமோ அல்லது வழிபடுவோர் சங்கச் செயலாளரிடமிருந்தோ பெற்று உறுப்பினர்களாகலாம் உறுப்புரிமைப் படிவங்கள் அனுப்புவதற்குரிய இறுதித்திகதி 1989 ஆம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் திகதியாகும்.

**உறுப்பினராவதற்குரிய தகைமைகள்**

(அ) விண்ணப்பம் அனுப்பவேண்டிய கடைசித் திகதியில் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும்.

(ஆ) சைவசமயத்தைச் சேர்ந்தவராகவும்

(இ) மேற்படி ஆலய வளாகத்தை அண்டிய கோண்டாவில், கொக்குவில் பகுதியில் வசிக்கும், வழிபடுவோராகவும்

ஈ தனது விண்ணப்பப் படிவத்துடன் ஆயுள் உறுப்பினராக விரும்பின் ரூபா 500 நன்கொடையாகவும், சாதாரண உறுப்பினராக விரும்பின் ரூபா 10/- சந்தாவாகவும் செலுத்துபவராகவும்

(உ) எப்பொழுதேனும் ஒழுக்கக்கேடு சம்பந்தமான குற்றத்திற்காக எந்த ஒரு நீதிமன்றத்திலும் தண்டிக்கப்படாதவராகவும்

(ஊ) இக்கோவிலின் ஊழியராக அல்லது மதகுருவாக இருந்து கொடுப்பனவுகள் பெறுதவராகவும்,

(எ) இக்கோவிலில் இலாபகரமான எவ்வித வேலைகளுக்கான ஒப்பந்தத்தில் ஈடுபடாதவராகவும் இருத்தல் வேண்டும்.

மு கு: உறுப்புரிமைப் படிவங்கள் கொக்குவில் கிழக்கு கிராமசேவகர் அலுவலகத்தில் பெற்றுக்கொண்டும் மீள நிரப்பி ஒப்படைக்கலாம்.

ஆணையாளர்கள்:
திரு. சோ அருணாசலம்
(தலைவர்)
திரு. கு கிட்டிணர்
திரு செ நடராசா
கொக்குவில் நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி
அம்பாள் ஆலய
விசாரணைக் குழு

யோகஸ்தான்,
அளவெட்டி-தெற்கு
அளவெட்டி
9—1—1989. (8663)

---

## அராலியில் உழவர் விழா

யாழ்ப்பாணம், ஜன 14

அராலி பாவத்துறை விளையாட்டுக் கழகத்தின் உழவர் விழாவைத்தைப்பொங்கல தினத்தன்று அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் கழகத் தலைவர் கமலநாதன் தலைமையில் நடைபெறும்.

வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு கா வைத்திலிங்கம் விழாவில் பிரதம விருந்தினராக் கலந்து கொள்வார். [ ]

## மானிப்பாய் மகளிர் கல்லூரியில்

யாழ்ப்பாணம், ஜன 14

அண்மையில் வெளியான ஜீ. சி. ஈ. உயர்தர பரீட்சைப் பெறுபேறுகளில் மானிப்பாய் மகளிர் கல்லூரியிலிருந்து வர்த்தகப் பிரிவில் ஒரு மாணவி ஏ பி 2சி பெற்றுள்ளார்

47 மாணவிகள் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி கோரி விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களில் நாலு பேர் உயிரியல் விஞ்ஞானப் பிரிவையும் 30 பேர் வர்த்தகப் பிரிவையும் 13 பேர் கலைப் பிரிவையும் சேர்ந்தவர்களாவர்

பரீட்சைக்குத் தோற்றிய மாணவிகளில் 40 சதவீதமானோர் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர். (ச)

## பற்றுக்குறை நீங்கியது

புங்குடுதீவு ஜன 14

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தில் நீண்டகாலமாக நிலவி வந்த மனையியல் ஆசிரியை பற்றுக்குறை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இருந்து வெளியேறிய ஆசிரியை ஒருவர் மனையியல் ஆசிரியையாக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இப்பற்றுக்குறை நீங்கியுள்ளது. (ச-131)

---

## WANTED-
## Accounts Trainees

**Applicants shold have the following :**
★ G. C. E (O/L) with 5 Credits
★ G. C. E (A/L) with 3 Passes
★ Knowledge of English Typing
★ Residing within 3 miles of City limits

**Closing Date of Application: 23-01-89**

**N. Karunai Ananthan & Co.**
Accountants & Auditors
C/o. Taxman,
Kannathiddy Junction,
JAFFNA.
(C/1180)

---

## மூன்றுவது ஆண்டு நினைவு அஞ்சலி



**தம்பிப்பிள்ளை திருச்செல்வம்**
(முன்னாள் கிராமசேவையாளர்)

அருந்தவப் புதல்வன், அருமைத் தம்பி அருந்தொருமித்த கணவன், கட்டுப்பாடான தந்தை. கண்ணன் போலக் கவலையற்று வாழ்ந்தீர்கள். பிரிக்கப்பட்ட நாள் முதலாய் நாம் அனாதைகள், சிறகொடிந்த பறவைகள் போலானோம். நிலவில்லா வானம் போலானோம் திக்கற்றவர்களானோம். தெய்வமாக நீங்களே எம்மை வழிநடத்துவதை உணர்கின்றோம். உங்கள் புகழ் மேலோங்க எம்மை ஆசீர்வதியுங்கள். உங்கள் நினைவு எம் உதிரத்தில் ஓடுகின்றது தெய்வமே நீங்கள் சாந்தி பெற்று எம்மையும் சாந்தி அடையச் செய்யுங்கள்.

''பௌர்ணமி''

தாமோதரம் பிள்ளை வீதி, மனைவி, மக்கள்
சாவகச்சேரி. பெற்றோர், உற்றோர்
(8095)

---

## அறிவித்தல்

### முல்லைத்தீவு மாவட்டத்தில் கடும்பாதிப்புற்றோருக்கான நிவாரணம் வழங்கல்

1983 ம் ஆண்டு யூலை மாதம் 24ம் திகதியில் இருந்து ஏற்பட்ட இனக்கலவரங்கள், வன்செயல்கள், பாதுகாப்பு நடவடிக்கைகள், தொடர்ந்த உள்நாட்டுப் பதட்ட நிலை ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புக்கள் ஊனங்களுக்கான நிவாரணம் வழங்கும் வேலைகள் இச் செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்நிவாரணத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் அவ்வப் பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் பணிமனையில் கீழ்கண்ட திகதிகளில் வழங்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் வழங்குவதற்கான தகைமை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒருங்கிணைந்த புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ''குடும்பப் பதிவு அட்டை-பின்'' பிரகாரம் நிர்ணயிக்கப்படும்.

விண்ணப்பங்கள் இணைப்பிரதியில் பூர்த்தி செய்யப்பட்டு கீழ்க்கண்ட திகதிக்கு முன்பு பகுதி கிராம சேவை உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்படல் வேண்டும். இது சம்பந்தமான மேலதிக விபரங்களைத் தங்கள் பகுதி உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலோ அல்லது கிராம சேவை உத்தியோகத்தரிடமிருந்தோ பெற்றுக் கொள்ளலாம்.

| உதவி அரசாங்க அதிபர் பிரிவு. | உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும் திகதிகள். | விண்ணப்பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு கிராம சேவை உத்தியோகத்தரிடம் கையளிக்கப்பட வேண்டிய திகதி |
|---|---|---|
| 1 மாந்தை கிழக்கு (பாண்டியன்குளம்) | 23-01-89 முதல் 27-01-89 வரை | 1989.02.15 ஆம் திகதிக்கு முன்பு |
| 2. துணுக்காய் | 30-01-89 முதல் 03-02-89 வரை | 1989-02-23 ஆம் திகதிக்கு முன்பு |
| 3 புதுக்குடியிருப்பு | 13-02-89 முதல் 17-02-89 வரை | 1989 03-08 ஆம் திகதிக்கு முன்பு |
| 4. கரைதுறைப்பற்று (முல்லைத்தீவு) | 27-02-89 முதல் 03-03-89 வரை | 1989-03-22 ஆம் திகதிக்கு முன்பு |

க. பொன்னம்பலம்,
முல்லைத்தீவு அரசாங்க அதிபர்.

கச்சேரி முல்லைத்தீவு,
08-01-1989 (C/1302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MAXELL

MAXELL உற்பத்திப் பொருட்களை முதன்முறையாக வடமாகாணத்துக்கு அறிமுகமாக்கி கசட் உலகின் சாதனையை ஏற்படுத்தியவர்கள் எம்மிடம் சகலவிதமான கைக்கடிகாற, கமரா, கல்குலேட்டஸ், பற்றிவகைகள், பலரகமான (ஓடியோ, வீடியோ) கசட் வகைகள், விளையாட்டுப் பொருட்கள், B) பியூட்டிக்குறு (ஒறிஜினல்) பவுடர், கலர்சுருள்வகை (Film Rolls) "மைடின் சால்மேஸ்" வகைகள் நிதான விலைகளில் பெற்றுக்கொள்ள

யாழ் மாவட்ட விநியோகஸ்தர்கள்

**MAXALL HOUSE**

**மக்ஸ்சல் கவுஸ்**

**No 20, JUBILEE BAZAAR, JAFFNA.**

(ராணி சினிமா அருகாமை)

(869F)



மங்களம் பொங்கிடும் தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாடும் எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் உள்ளங்கனிந்த

**பொங்கல் நல்வாழ்த்துக்களைத்**

தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

உங்கள் அனைத்து வீடியோ படத்தேவைகட்கும்- றெக்கோடிங் சேவைகட்கும் நாடுங்கள்

**குணம் வீடியோ சென்ரர்**

42, மணிக்கூட்டு வீதி.

யாழ்ப்பாணம்.

(C/1327)



## பிரதேச உற்பத்திப் பொருட்களுக்கான கூறுவிலை கோரல்

பனை அபிவிருத்திச் சபையின் 'கற்பகம்' விற்பனை நிலையங்களில் விற்பனை செய்வதற்குத் தரமான பிரதேச உற்பத்திப் பொருட்களுக்கு கூறுவிலை கோரப்படுகின்றது. கூறுவிலை பற்றிய முழு விபரங்களையும், விண்ணப்பப் படிவத்தையும் பெற்றுக்கொள்வதற்கு பின்வரும் முகவரிகளுள் ஒன்றுடன் தொடர்பு கொள்ளவும்.

கூறுவிலை கோரலுக்கான

விண்ணப்ப முடிவுத் திகதி: 31. 01. 89

சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர்,
சந்தைப்படுத்தும் பகுதி,
இல. 53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,
இல. 54, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/1318)



## யாழ் - கொழும்பு



**விமான சேவை**

யாழ்-கொழும்பு விமானசேவை யாழ்நகரில் இருந்து பலாலிக்கு விசேட போக்குவரத்து வசதியுடன் வழமைபோல் நடைபெறுகின்றது. ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

Telex Messages, கடிதங்கள், சிறு பொதிகள் விமானமூலம் அனுப்பப்படும்.

**MACK TRAVELS**
PRIVATE LIMITED

**JAFFNA**

(C/1326)



துன்பம் நீங்கி இன்பம் பெருகிட நண்பர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் அனைவருக்கும் எமது

**பொங்கல் நல்வாழ்த்துக்கள்**

## அல்டி

சகல விதமான

- கைக்கடிகாரங்கள்
- சுவர்மணிக்கூடுகள்

பெற்றுக்கொள்ள யாழ் நகரில் பிரசித்திபெற்ற ஸ்தாபனம்

★ அல்டி ★

We undertake all kinds of Watches for repairs

**★ ALDI ★**

**269/1, Power House Road, JAFFNA.**

**Prop.- S. Shanmugathasan**

(C-1317)



## கம்பியூட்டர் கல்வி

**Diploma in Computer Programming & Data Processing Basic**

4 மாத வகுப்புகள்
சனி, ஞாயிறு

**Practicals on:**
KEYBOARD
CASSETTE DRIVE
DISK DRIVE
&
DOT MATRIX PRINTER

Lectures by Members of the Institute of Data Processing Management (London)

ஆரம்பம்: 21-1-89

Fees: மாதம் 250/ மட்டுமே!

பெறுமதியுள்ள சான்றிதழ் வழங்கப்படும்.

C I M A, I D P M, I A B
வகுப்புகளும் நடைபெறுகின்றன

மேலும் விபரங்களுக்கு:

**School of Business Adminis ratio**

(Leaders in Computer Education)
16, 3 ஆம் குறுக்கு வீதி,
(O L R தேவாலய மேற்குப் பக்கம்)
யாழ்ப்பாணம்

(C-1323)



## VACANCY

Applications are invited from suitable applicants for the post of
COMPUTER INSTRUCTOR/
INSTRUCTRESS.

QUALIFICATIONS: Applicant should posses: Diploma in system analysis and programming. Knowledge in programming Basic Dbase III plus, Lotus 1, 2 & 3, languages and I B M system operation with MS Dos will be added qualification.

SALARY: 2500/- and above depends on the applicants merit. Apply on or before 18 th January, 1989

432, C/o Uthayan Publication [pvt] Ltd., Jaffna.

(C/1312)



எங்கள் பொங்கல் நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் வேளையில்

**18-01-1989 தொடக்கம்**

எங்கள் காரியாலயத்தில்

**மீண்டும் போட்டோஸ்ரட்**

பிரதிகள் எடுத்துக் கொடுக்கப்படும் என்பதை வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**விஜயலங்கா எக்ஸ்போட்ஸ் அன் கோன்ராக்ஸ் கம்பனி**

பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

(9155)



## எமது இதயம் கனிந்த பொங்கல் நல் வாழ்த்துக்கள்






## FORTUNA ENTERPRISES

(Labour Licence: No 79)

Immediate Vacancies in Kuwait

**உடனடி வேலை வாய்ப்புக்கள்**

குவைத்

Airport and Hospital Cleaners
விமான நிலைய, ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர் } — 250

சம்பளம்: — 35 KD

அத்துடன் மேலதிக நேர வேலையும் இருப்பிட வசதியும்.

50 பேர் அவசரமாகவும் உடனடியாகவும் தேவைப்படுவதால்

17 1-89 க்கு முன் பாஸ்போட்டுடனும் 7 போட்டோக்களுடன் விண்ணப்பித்தால்

**20-2-89க்கு முன் பயணமாகலாம்**

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-

**இ. விஸ்வேஸ்ராயன்**

3 ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ் வீதி,
கொக்குவில்.

[C-1321]



## NEW MASTER INSTITUTE

241, Navalar Road, Jaffna. B. M. C. Lane, Jaffna.

**89 A/L PAPERCLASSES**

பிரிவு - 1 [Saturday & Sunday]

ஆரம்பம் 15- 01- 1989
Sunday 8. 30 a. m

8.30 - 9.30 — Chemistry — திரு. தில்லைநாதன்
9.30 - 10.30 — Physics — திரு. வர்ணம்
10.30 11.30 — Zoology — திரு. நாகநாதன்
11.30 - 12.30 — Botany — திரு. குகாதரன்

(C-1228)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் எமது

**பொங்கல் வாழ்த்துக்கள்**

உரித்தாகுக!

'வயிற்றுக்குச் சோறிடவேண்டும். இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் பயிற்றிப் பல கல்வி தந்து-இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்.'

—பாரதியார்:

20 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி 'பாரதி பாடல்கள்' என்ற நூலைப் பெற்றுக்கொளுங்கள்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்

# சஞ்சீவி

14 - 01 - 1989 சனிக்கிழமை

பாடசாலை அதிபர்களுக்கு

**பணிவான வேண்டுகோள்!**

குழந்தைகள் நீதி நூல்கள் படிப்பதற்கு வசதியாக எம்மிடம் பிரசுரங்கள் உள்ளன. தயவு செய்து பிள்ளைகள் எங்கள் தயாரிப்புகளின் மேலுறைகளைச் சேர்த்து அனுப்புமாறு செய்து, பிரசுரங்களைப் பரிசாகப் பெற்றுக் கொடுங்கள்.

நன்றி. வணக்கம்.

மில்க்வைற் அதிபர்,

த. பெ இல 77, யாழ்ப்பாணம்.

## விடுதலைப் புலிகள் தவிர ஏனையோர் விடுதலை

கொழும்பு, ஜன 14

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் கைதானவர்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 42 பேரைத் தவிர ஏனையோர் விடுவிக்கப்பட்டுவிட்டனர்

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

கைதான 91 மலையக இளைஞர்களில் 10 பேர் மாத்திரமே பூஸா முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் குறித்து அரசாங்கம் விரைவில் தீர்மானம் ஒன்றை எடுக்கும். (உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திரு. எம். ஸி. சுப்பிரமணியம்

திரு. எம். ஸி. சுப்பிரமணியம் அவர்கள் 12-01-1989 இல் காலமாகிவிட்டார்! இவர் முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும், இலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி விசாலாட்சி ஐயம்பிள்ளை, திருமதி பாக்கியம் செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சந்திரபோஸ் (ஆசிரியர், வைத்தீஸ்வர வித்தியாலயம்), திருமதி நிர்மலாதேவி கந்தையா (கனடா), திரு. சந்திரதாஸ் (பிரான்ஸ்), கலாநிதிர வீந்திரதாஸ் (கனடா), கலாதேவி, ஜெயந்தி, இராகுலன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. S. கந்தையா (கனடா), திருமதி C. சாந்தலட்சுமி திரு. T. கதிரேசன் (அரசாங்க பெருந் தோட்டக் கூட்டுத்தாபனம்) திரு. V. விஜயகுமார் (யாழ் பல்கலைக்கழகம் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரது மாமனாரும், செல்வி K. கவிதா (கனடா), C. பார்த்திபன், C. அபிரூபன் K. அச்சுதன் (கனடா), K. ஜெய்செந்தூர், V. நிரோஷன் ஆகியோரது பாசமுள்ள பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-01-1989 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வில்லூன்றி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:

S. சந்திரபோஸ்

21/1, கலைப்புலவர் வீதி,

யாழ்ப்பாணம். (8954)

### நவரேத்தினம் செல்வரேத்தினம்

(T. R. R. O)

நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட திரு. நவரெத்தினம் செல்வரெத்தினம் 13.01.1989 இல் காலமானார்.

அன்னார் வசந்தகோவின் அன்புக்கணவரும், ரவீந்திரன் (United tractors equipment Ltd Colombo), வத்சலா (English Teacher Trincomalee), கோஷலா [Agro marine Ltd -Jaffna] ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15.01.1989 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில், நல்லூர் சிவன்கோவில் முன்பாக உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

செல்வரெத்தினம் ரவீந்திரன் (மகன்)

127, பருத்தித்துறை வீதி,

நல்லூர். (8971)

### சின்னத்தம்பி- குணம்சொலமன்ஸ்

(பிரபல வர்த்தகர்)

திருமலையைச் சேர்ந்த சின்னத்தம்பி குணம் - சொலமன்ஸ் 12-01-1989 இல் காலமானார். இவர் திருமதி திரேசம்மா-குணம் சொலமன்ஸ் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி இராசேஜஸ்வரி-வேதநாயகம், குகதாஸ், திருமதி லூர்த்மேரி - சண்முகராஜா, சந்தணதாஸ் திருமதி சரோஜா - புலேந்திரன், ஜேசுதாஸ், திருமதி குமாரி (உமா)-மகேசன், வசந்தி, கோமேஸ்வரதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் Dr S.R வேதநாயகம், புலேந்திரன் (ராதா) சண்முகராஜா, மகேசன், இராகினி, சாந்தா, லோஜினி, வதனி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரது பூதவுடல் நல்லடக்கம் 14-01-89 (சனிக்கிழமை) திருமலை சேமக்காலையில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-சந்தணதாஸ் (மகன்)

இல:312,

N.C ரோட்,

திருமலை. (9160)

## மரண விசாரணை நடைபெற்றது

யாழ்ப்பாணம், ஜன 14

கொழும்புத்துறையில் சுட்டுக் கொல்லப்பட்ட நவசமசமாஜக்கட்சிப் பிரமுகர் திரு. ஆ. க. அண்ணாமலையின் [வயது 50] மரண விசாரணை நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் இடம்பெற்றது.

இவரது இறுதிக் கிரியைகள் நாளை காலை 10 மணிக்கு நடைபெறும்.

இவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்குத் தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கம் உரிமை கோரியிருக்கிறது. (உ)

## இன்றும் நாளையும்....

### ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜன. 14

வட்டுக்கோட்டை-சித்தன்கேணி கலாநிலையத்தின் 27ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிதொடக்கம் நடைபெறும். (க)

### வெளியீட்டு விழா

குருநகர், ஜன. 14

யாழ்ப்பாணம், இன்ஸ்டிரியூட் ஒப் டேற்றுப்ரோஸஸிங் [ஐ.டி.பி] நிறுவன மாணவர் மன்றத்தின் "கம்பியூட்டர்" கையெழுத்துப் பிரதி வெளியீட்டு விழாவும், பாராட்டு வைபவமும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு காங்கேசன்துறைவீதியிலுள்ளநிலைய மண்டபத்தில் நடைபெறும். [க-51]

### திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன. 14

கொக்குவில்கலைவாணி சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்றுசனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெறுகின்றது. [ச]

### மகர தீப விழா

காங்கேசன்துறை, ஜன 14

கருவில் ஹரிஹர புத்திர ஐயனார் கோவிலில் இன்று சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் மகர தீப விழா நடைபெறும். [த-16]

### பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 14

வட்டுக்கோட்டை இளைஞர் உடலுள விருத்திச் சங்கமும் மகளிர் இலக்கிய வட்டமும் இணைந்து நடத்தும் பொங்கல் விழா நாளை 15ஆம் திகதி பிற்பகல் 3.00 மணியளவில் விளாத்தித்தோட்டத்திலுள்ள அன்னை இல்லத்தில் நடைபெறும். [த]

### நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஜன. 14

திரு. க. தணிகாசலம் எழுதிய - பிரம்படி திரு. க. ரவிந்திரன் எழுதிய 'பாரதியின் மெய்ஞானம்' ஆகிய நூல்களின் அறிமுக விழா இன்று [சனிக்கிழமை] பி.ப. 2.00 மணிக்கு இருபாலை சி.சி.த.க. பாடசாலைமண்டபத்தில் நடைபெறும். [ச]

### கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 14

காங்கேசன் துறை தொகுதிசென்.ஜோண்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் விசேட கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். [ச]

### பாராட்டு

யாழ்ப்பாணம், ஜன. 14

ஐம்பது ஆண்டுகளாக சைவபரிபாலன சபைக்கு தொண்டாற்றிய சைவப் பெரியார்கள் ஐவரைப் பாராட்டும் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும். [ச]

### பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ். பாவலர் கல்விக் கழகத்தின் 13 ஆவது ஆண்டு வருடாந்த பொதுக்கூட்டம் நாளை 15 ஆம் திகதி ஞாயிறு காலை 10.00 மணிக்கு 49/5 யாழ் ரோட் செயலாளரது இல்லத்தில் நடைபெறும். [உ]

### அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ் குடா நாட்டில் இராணுவ நடவடிக்கைகளினால் விதவையான வர்களுக்கு கோப்பாய் லயன்ஸ் கழகம் தையல் இயந்திரங்களை வழங்க உள்ளது.

நாளை பிற்பகல் 2 மணி அளவில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் திரு. விஜயரட்ணம் இவற்றை வழங்குவார். [உ-5]

### புதிய பணிமனை

யாழ்ப்பாணம், ஜன 14

செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் கண்டி வீதியில் உள்ள புதிய பணிமனை இன்று திறந்து வைக்கப்படும்.

நோர்வே செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ரொல்ஃப் ஹோம் காலை 11.00 மணியளவில் பணிமனையைத் திறந்து வைப்பார். [உ-5]

## நகரக் கொமாண்டரின் பொங்கல் வாழ்த்து

யாழ்ப்பாணம், ஜன 14

இந்திய அமைதிப் படையின் சார்பில் யாழ்ப்பாணப் பிரசைகளுக்கு, யாழ் நகரக் கொமாண்டர் பிரிகேடியர் காலோன் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அவரது பொங்கல் செய்தியில் குறிப்பிடப் பட்டிருப்பதாவது.-

இருள் படர்ந்திருந்த கடந்த வருடங்கள் மறைந்து, நம்பிக்கை ஊட்டும் விதத்தில் புதிய வருடம் மலர்கிறது

தமிழ் மக்கள், மனத்தில் பயமில்லாமலும், நிமிர்ந்த தலையுடனும் வாழ்வதற்கான உண்மையான தீர்மானத்தையும், அமைதியையும், சுபிட்சத்தையும் விரும்பும் பிரசைகள் செய்ய வேண்டும். இன்றைய பொங்கல் திருநாள் அத்தகைய தீர்மானத்தைச் செய்வதற்கு உகந்த வேளையாகும்.

### யாழ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் சுமார் 15 நிமிடநேரம்தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன.

இந்த துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தின் போது கல்லூரி மைதானத்தில் நின்ற இரு மாணவர்கள் காயமடைந்தனர்.

அவர்கள் இருவரும்உடனடியாகயாழ்ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

சோமசுந்தரம் செந்தில்நாதன் (வயது 13) முத்துச்சாமி சிவகணேசன் (வயது13) ஆகிய இருவருமே காயமடைந்த மாணவர்கள். முத்துசாமி சிவகணேசன் பின்னர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார். (ஐ-10)

## இன்று வீதி திறப்பும் கல்லூரிகள் கையளிப்பும்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த மகளிர் கல்லூரி ஆகியவை இன்று காலை கல்லூரி நிர்வாகிகளிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படும்.

இதேசமயம் பருத்தித்துறை - தொண்டமானாறு கடற்கரை வீதியும் இன்று காலையில் திறந்து வைக்கப்படும். இவ்வீதியூடான பஸ் போக்குவரத்தும் இன்று ஆரம்பமாகும்.

மேற்படி இரு பாடசாலைகளும் முன்னர் இராணுவ முகாம்களாகப் பாவிக்கப்பட்டு வந்தன என்பதும்-

இராணுவத்தினரால் இவ்வீதிகள் தடை செய்யப்பட்டிருந்தன என்பதும் தெரிந்ததே.

பருத்தித்துறை கல்லூரி வீதி, நீதிமன்ற வீதி, தம்பசிட்டி வீதி ஆகியனவும் இன்று போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டிருக்கிறது. (உ-163-70)


### பெண் ஊழியர்கள் தேவை

எமது கம்பனியில் உற்பத்திப் பகுதிக்கு [Production Section] பெண் ஊழியர்கள் தேவை. நேர்முகப்பரீட்சை 16 ஆம், 17 ஆம், 18 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் 12 மணி வரை நடைபெறும்.

பொது முகாமையாளர்,

**அன்றீஸ் அன் கம்பனி லிமிட்டற்**

கண்டி வீதி, நாவற்குழி

(8958)


### அறிவித்தல்

**நவசமசமாஜக்கட்சி யாழ் மாவட்டக்குழு**

நவசமசமாஜக்கட்சியின் அரசியல் குழு உறுப்பினரும் தேசிய இனங்களின் இணைப்புச் செயலாளருமாகிய தோழர் ஆ. க. அண்ணாமலை 12-1-89 இல் அகால மரணமடைந்தார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரது பூதவுடல் இல 36 புங்கங்குளம் வீதியிலிருக்கும் அவரது இல்லத்திலிருந்து 15.1.89 ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கொழும்புத்துறை துண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். அன்னாரது ஈமக்கிரியைகளில் கட்சித்தோழர்கள் தொழிற்சங்க அங்கத்தவர்கள், நண்பர்கள் அனுதாபிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தோழமையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நவசமசமாஜக் கட்சி,

யாழ். மாவட்டக்குழு,

644, 1/1 ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம். [8973]

### சிங்கள..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பிள்ளைகள் இடம்பெயர்ந்து விட்டதால் பாடசாலையை மீண்டும் இயங்க வைக்க முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-150)

### ஆசிரியர்..-

களின் பெயர்ப்பட்டியல் நேற்று யாழ் கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது.

இதேவேளை முன் சேவைப் பயிற்சி பெறவுள்ள 70 தராதரப்பத்திரமுள்ள ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியலும் நேற்று கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது.

இவர்களுக்கான பயிற்சிகள் ஆரம்பமாகும் திகதி இடம் ஆகியவை குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என யாழ் கல்வித் திணைக்களம் [illegible] (உ-10)

### இன்று....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்று மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது

சுப நாளான பொங்கல் தினத்தில் இருந்து ஊரடங்கை நீக்குவதில் மகிழ்ச்சி அடைவதாகவும்-

கஷ்டப்பட்டு அடைந்த அமைதியையும், ஒற்றுமையையும் நிலை நிறுத்த உதவுமாறும்-

அமைதிக்குப் பங்கம் இழைக்கவோ, திங்கிழைப்பதையோ அனுமதிக்கவேண்டாம் என்றும்-

அமைதிக்காகவும் மக்கள் சுபிட்சத்துக்காகவும் அமைதிப்படை எல்லா உதவிகளையும் செய்யும் என்றும்- அமைதிப்படை சட்டாரங்கள் மேலும் தெரிவித்தன (அ-இ)

## மரண அறிவித்தல்கள்

### சிவகுரு சிவசுப்பிரமணியம்

(இளைப்பாறிய சிறுப்பர் State Bank of India உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோவில் பரிபாலனசபைத் தலைவர்)

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவில்கிழக்கு கோவில் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான சிவகுருசிவசுப்பிரமணியம்அவர்கள் 10.1.89ல் காலமாகிவிட்டார் இவர்காலம் சென்றதிரு. திருமதி ஆறுமுகம் தம்பதிகளின் மருமகனும், தையல்நாயகியின் (வியாழம்பாள்) அன்புக் கணவரும், லோகநாதன் (Industrial Finance Company Colombo), சிவநாதன் (லண்டன்) ரவீந்திரநாதன் (லண்டன்), குருநாதன் (லண்டன்) திருமதி கலா (லண்டன்), திருமதி சித்திரா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், புவனேஸ்வரி, புஸ்பவதி, சாந்தி, நிருபா, ருத்திரா, டர்பூட ஜனர்த்தன் ஆகியோரின் மாமனும், குவிந்தா, கிருஷா, யஜிந்தா, ஜெகிலா, ஜெனெஸ், ரமா, பிரதீஷ் ரேகான், ரேகா, ஆதவன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-01-89ஆம் திகதி காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல தகனக்கிரியைக்காக கொக்குவில மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;

திருமதி தை. சிவசுப்பிரமணியம்

கோவில் வீதி.

கொக்குவில் கிழக்கு. (8970)

### திருமதி சி. மகேஸ்வரி

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் கடமைபுரியும் இராசப்பு சிவலிங்கத்தின் அன்பு மனைவி மகேஸ்வரி காலமானார். இவர் வதனரூபினி (ஆசிரியை, பாத்திமாமகளிர் கல்லூரி, கொழும்பு) மோகன் (மேற்கு ஜேர்மனி) வசந்தன் ஆகியோரின் அன்புத்தாயாரும், சிவசுப்பிரமணியம் (உபதபாலதிபர், ஏழாலை தெற்கு), தனபாலசிங்கம் (நூலகர், கொக்குவில இந்துக் கல்லூரி) சற்குணசிங்கம் (முகாரி, காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை) திருமதி யோகேஸ்வரி விஜயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் விஜயரட்ணம் (துறைமுக அதிகார சபை, கொழும்பு) அவர்களின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை 15.1.89 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு, ஏழாலை மேற்கு மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;

இ. சிவலிங்கம்

ஏழாலை மேற்கு.

(8963)

### திரு. ஆ. க. அண்ணாமலை

(நவசமசமாஜக்கட்சி)

திரு. ஆ. க. அண்ணாமலை 12-1-89 இல் அகால மரணமானார். இவர் பண்ணாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை கந்தசாமி, சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், சிவகாமசுந்தரியின் அன்புக் கணவரும், வாசுகியின் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) அன்புத் தந்தையும் காலஞ்சென்ற என். இராஜரத்தினம், பதுமநிதி தம்பதிகளின் அன்பு மருமகனும், வைத்திய கலாநிதி புஸ்பவதி சிவானந்தம் (நீதிபதி-இந்தியா), வைத்திய கலாநிதி செல்வநாயகி, தவசோதி (லண்டன்), வைத்தியக் கலாநிதிகள் இராஜகோபால் இராஜரத்தினம் (அவுஸ்திரேலியா), பாலகிருஷ்ணன் இராஜரத்தினம் (ட்ரான்ஸ்கி), கிருஸ்ணரத்தினம் இராஜரத்தினம் (சிம்பாப்வே) மற்றும் மனோரஞ்சிதம், ஸ்ரீகாந்தன் (அமெரிக்கா), இரங்கநாதன் இராஜரத்தினம் (பஹ்றெயின்) கிருஷ்ண செல்வலிங்கம் (சிங்கப்பூர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 15-1-89 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இல 36, புங்கங்குளம் வீதியிலிருந்து கொழும்புத்துறை துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

திருமதி சிவகாமசுந்தரி அண்ணாமலை,

36, புங்கங்குளம் வீதி,

யாழ்ப்பாணம். (8974)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 598/8, இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 14-01-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது: Printed and Published by New Uthayan Publications [illegible] Road, Jaffna on Saturday 14th January 1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதித்துறையில்
நாணயம்மிக்க நண்பன்
"ஷப்ரு"
207,மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.

சஞ்சீவி சஞ்சிகை

Your Friends in Finance
SHABRA
61, New Bullers Road, Col-6

14 - 01 - 1989 சனிக்கிழமை

# தைப்பொங்கல் பண்டிகை உணர்த்தும் அறிவியல், ஆத்மீக, உலகியல் உண்மைகள்

அருணோதயம், உலகத்தில் மங்கலத்தையும் புத்துணர்வையும் எழுச்சியையும் ஊற்றுகப் பெருக வைக்கும் எழில் நிறைந்த காட்சி.

'அசையும் — அசையாப் பொருள்களின் உள் உறை ஆத்மா சூரியன்' என்று போற்றுகிறது ரிக்வேதம்.

உலகத்தை வாழ்விக்கும் சூரியன் கண்கண்ட தெய்வம்! கதிரவனைப் பரப்பிரம்மமாகவே சித்தரிக்கிறது, ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்திரம்.

'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்' என்றே இளங்கோவடிகள் சிலம்பின் கதையைத் தொடங்கி இருக்கிறார்.

தொல்காப்பியத்தில்; 'காலம் உலகம் உயிரே உடம்பு' என்று வரும் சூத்திரத்தில், 'ஞாயிறு திங்கள் சொல் எனவரூஉம்' என்று கூறியிருப்பதில் இருந்து, சூரிய வழிபாடு மிகவும் தொன்று தொட்டது என்பது விளங்குகிறது.

காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரையில் சூரிய வழிபாடு நிலவியிருந்தது என்பதற்குச் சான்றுகளாக இந்தியாவில் பல மாநிலங்களிலும் கதிரவனுக்குக் கோயில்கள் இருப்பது அறியக்கிடக்கிறது.

தைத்ரீய ஆரண்யகம், பிரம்ம புராணம், வராக புராணம், அக்கினி புராணம் போன்ற பல புராணங்களில் சூரியனின் சிறப்பையும் அருள் தன்மையையும் பரக்கக்காணலாம்.

சாயா ஸம்ஞாஸதே சூரிய நாராயணப் பெருமானின் அருளைப் பெற, மந்திரத்ரஷ்டாக்களான முனிவர்கள் முதல் அப்பைய தீட்சிதர் வரையில் கதிரவனைப்பாடித் துதித்துப் பரவியிருக்கிறார்கள்.

## சூரிய ஒளி

கிருஷ்ண யாஸுர் வேதத்தைச்சூரிய பகவானிடமிருந்து பெற்ற யாஜ்ஞவல்லிய மகரிஷி சூரிய கவசம் என்ற துதி நூலை இயற்றி அருளியிருக்கிறார்.

'சூரிய ஒளி இதய நோயைக் குணமாக்கும்' என்றும்,

'கண்பார்வை செம்மை அடையும்' என்றும் சரகஸம்ஹிதையில் காண்கிறது.

மயூரன் என்ற அந்தகக்கவி, சூரிய சதகம் என்ற அருணஞ்சலியைப்பாடி பார்வையைப் பெற்றதாக வரலாறு உண்டு.

கங்கை கொண்ட சோழபுரத்தில், கமலயந்திரம் என்ற சூரிய யந்திரம் இருக்கிறது.

எட்டுக் கிரகங்கள் புறத்தே இருக்க, விரிந்த தாமரை இதழ்களில் சூரியன் உலகத்தைக் காக்கும் பொருட்டு பவனியை மேற்கொள்கிறான்.

இரண்டாம் நூற்றாண்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டில் கட்டிய சூரியனார் கோயில் வரை பல கதிரவன் கோயில்கள் இந்தியாவில் உள்ளன.

சூரியனைத் தங்கள் வமிசத்தின் முதல்வனாகக் கொண்ட வழித்தோன்றல்கள் உண்டு.


ஸ்ரீராமபிரானே சூரிய வமிசத்தைச் சேர்ந்தவர்.

ஸ்ரீ சங்கர பகவத்பாதர் ஸ்தாபித்த ஷண்மதங்களில் சௌரம் என்ற சூரிய வழிபாடே முதலாவதாக விளங்குகிறது.

'ஆதித்யம் அம்பிகாம் விஷ்ணும் கணநாதம் மகேசுவரம் கௌமாரம்' என்ற ஆறு சமயங்களை ஸ்தாபித்த பகவத்பாதர், 'பிரபஞ்ச ஸாரம்' என்ற நூலில், 'எங்களை எல்லாம் காப்பாற்று' என்று சூரியனை வேண்டுகிறார்:

'செந்தாமரையில் வீற்றிருக்கும் மூன்று நேத்திரங்களை உடையவனே! இரு கரங்களில் செந்தாமரையைத் தாங்கி, மற்ற இரு கைகளாலும் வரத முத்திரை அருளி, வான வீதியில் சஞ்சரித்தபடி உலகத்தை வாழ்விக்கும் ஒளிப்பிழம்பே! எங்களைக் காப்பாற்று!'

இந்தப் பிரபஞ்சத்தையே சூரியன் காக்க வேண்டும்' என்று வேண்டுகிறோம்.



## காயத்திரி மந்திரம்

அன்றாடம் அனுஷ்டானம் செய்யும் காயத்ரி மந்திரத்திலும், 'சூரிய பகவானே, என் புத்தியைத் தெளிவாக்கு; பிரகாசத்தைக் கொடு' என்று தான் இறைஞ்சி வேண்டிக் கொள்கிறோம்.

பெரும்பாலும் கதிரவனுக் குரிய கோயில்கள் பலவும், உதயசூரியனில் இருந்து அந்திச் சூரியன் வரை அதன் கதிக்கு ஏற்பவே அமைந்திருக்கின்றன.

உலகில் சூரிய ஒளி பரவாவிட்டால் இயக்கமே இல்லை: சக்தியே இல்லை.

சீன யாத்திரிகர் ஹுவான் த்ஸாங்கூட இந்தியாவில் சூரிய வழிபாடு பரவியதைப் பற்றி எழுதியிருக்கிறார்.

## சிந்துவெளி நாகரிகம்

சிந்துவெளி நாகரிகத்தில் இருந்தே சூரிய வழிபாடு பிரபலமாக இருந்திருக்கிறது என்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன.

மொகஞ்சதரோ ஹரப்பா ஆகிய இடத்து அகழ்வாய்வுகளில் கிடைத்த மண் பாண்டங்களில் ஸ்வஸ்திகச் சின்னமும், சக்கரமும், கிரணங்கள் வீசும் வட்டங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

இதிகாசங்களிலும் சூரிய வழிபாடு பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. ஆதித்யஹ்ருதயம் என்ற சூரிய வணக்கம் ஸ்ரீ ராமனுக்கு அகஸ்திய முனிவர் உபதேசித்ததுதானே!

இவ்வளவும் ஏன்?

தமிழர் வாழ்க்கையில் சூரிய வழிபாடு தொன்று தொட்டு வளர்ந்து வந்திருக்கிறது.

## தைப்பொங்கல்

தை மாதம் முதல் திகதியை மகாசங்கிராந்தியாகக் கொண்டாடி மகிழ்கின்றோம்.

தட்சிணாயனம் முடிந்து உத்தராயணத்தின் முதல்நாள், தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் மகிழ்ச்சியும் இறை உணர்வும் வற்றாத பொன்னான நாள்; கரும்பும் பொங்கலும் இனிக்கும் சுவையான பண்டிகைநாள்.

உரோமக்காலைத் துளைக்கும் குளிரும் பனியும் குறைந்து, வசந்தம் ஏற்படப் போவதன் அறிகுறியாக மகிழ்ச்சியும் மங்கல காரியங்களும் பெருகப் போவதன் அடையாளமாக சூரியன் மகர ராசியில் பிரவேசிக்கும் போதே புதுப்பானையில் பொங்கலிட்டு வரவேற்று மகிழ்கிறோம்.

சூரியனைப் பித்ருகாரகன் என்றும்,

மேஷ ராசியில் உச்சன் என்றும்,

துலா ராசியில் நீசன் என்றும்;

சிம்மம் அவனது 'ஆட்சி வீடு' என்றும் 'பருஹத் ஸம்ஹிதை' கூறுகிறது.

சூரியனுக்குரிய மணி, மாணிக்கம். சூரிய தசை ஆறு ஆண்டுகள்

கிருத்திகை, உத்திரம், உத்திராடம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்குத் தொடக்க தசையாக சூரிய தசை அமையும்.

உலகை இயக்கி மன்னுயிர்களுக்கு இன்ப துன்பங்களை அளிக்கும் நவக்கிரகங்களுள் சூரியனே முக்கிய சக்தியாகத் திகழ்கிறான்.

பிரபஞ்ச அமைப்பில் எல்லாக் கோள்களுக்கும் மத்தியில் சூரியன் நின்று ஒளி வீசிச் சக்தியை அளிப்பது போல் கோயில் வழிபாட்டிலும் நவக்கிரகங்களுக்கு மத்தியில் சூரியன் இடம்பெற்றிருக்கிறான்.

உலகின் கண்கண்ட தெய்வமாக கதிரவனை உலக மக்கள் எல்லோரும் பரவி வழிபடுகிறார்கள். ★

---

## கருத்துக் கலசம் — மயூரா

### பொங்கலோ! பொங்கல்!!

பொங்கலோ! பொங்கல்!

பால் பொங்கி வழிய, அந்தப் பால் இருக்கும் புதுக் கலசத்தில் புத்தரிசி இட்டுப் பொங்குகின்றோம்.

அது மனிதன் மனம் பொங்குவதை, உள்ளம் உவகை கொள்வதைப் பிரதிபலிக்கும் காட்சி.

தை பிறந்தால் வழி பிறக்கும் எனத் தமிழர்கள் நம்புகிறார்கள்.

மாதங்கள் ஆறும் மண்ணிலே விதைத்த உழைப்பின் அறுவடையை, நெல்மணிகளாகச் சேகரித்த பின்னர், தனது உழைப்பையும், முயற்சியையும் வெற்றிப் பெறுபேறுக்கிய உதயனுக்கும், எருதுகளுக்கும் நன்றி செலுத்துவதற்காகத் தமிழ் உழவர் கொண்டாடியவையே தைப்பொங்கலும், பட்டிப் பொங்கலும் ஆகும்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு' — என்ற வள்ளுவன் வாக்குக்கு—

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்' — என்று அதே செந்நாப்போதர் ஏற்றிப் போற்றிய—

உழவர் பெருமக்கள் செயல் வடிவம் கொடுக்குங்கால் எழுந்த கொண்டாட்டங்களே— பண்டிகைகளே — தைப்பொங்கல் திருநாளும், பட்டிப் பொங்கலுமாம்.

உழைப்புக்குக் கிடைத்த வெற்றியை உவகையுடன், தமிழர் பண்பாட்டுக்கு அமைய மங்களகரமாக, மனம் மகிழ்ந்து, உழவர்கள் கொண்டாடிய இரண்டு பெருநாட்களையும் நாளடைவில் ஏனைய தமிழர்களும் தாமும் பண்டிகைகள் ஆக்கிக் கொண்டனர். உழவரும்; உழுதொழிலும் இல்லாமல் உலகம் ஏது?

அதனால் தைப்பொங்கல் தமிழர் தம் தேசியப் பண்டிகையாகவும்; கலாசார விழுமியம் நிறைந்ததாகவும் பூரணத்துவம் பெற்றது.

தித்திக்கும் கன்னல்; மஞ்சள், செந்நெல், தேன் கனிகள், இளநீர் என்பன மன நிறைவின் மாட்சி சொல்லும் மங்களப் பொருள்களாக விளங்குவதைக் காண்கின்றோம்.

உழைப்பின் வெற்றியால் உண்டான மனக்களிப்பும், உழைப்புக்கு உதவி செய்தவர்களுக்கு நன்றிக்கடன் செலுத்தும் நற்பண்பும் இரண்டறக்கலந்து மிளிரும் தமிழர் திருநாள் இவ்வருடத்தில் இன்றாகும்.

மங்களப் பொங்கல் புத்தமுதுப் பொங்கல் தமிழர் தம் இதயம் எல்லாம் புத்துணர்வையும், நிறைவையும் உண்டாக்குவதாகுக!

கார் காலம் கழிந்து, மழை அருகி, பனி ஓய்ந்த வேளை பிறக்கும் தை மாதத்தில் உதயனின் ஒளியில் தமிழர் உள்ளங்களில் உள்ளொளி பிரகாசிக்கட்டும்!! ★

---

# திருவள்ளுவர் ஆண்டு 2020 இன்று பிறக்கிறது

**ஏ. என். யோகநாதன்**
(தலைவர், தெய்வீகத் திருக்குறள் மன்றம்)

தமிழர் வாழ்வில் தைத் திங்கள் முதலாம் திகதி முக்கியத்துவம் வகிக்கிறது.

தைப்பொங்கலை இறைவனுக்கு நன்றிக்கடன் நாளாகக் கொண்டாடுகின்றோம்.

தமிழருக்கும் உலகத்திற்கும் வாழ்க்கை நூலான தெய்வீகத் திருக்குறளை அளித்தவர் திருவள்ளுவர் பெருமான்.

இன்று திருவள்ளுவராண்டு 2020 பிறக்கிறது.

அது மட்டுமல்ல, திருக்குறளின் அருமை பெருமையை, மேன்மையை உலகிற்கு எடுத்துக் காட்டிய மேல்நாட்டு தத்துவஞானி டாக்டர் அல்பேர்ட்சுவைற்சரின் 114ஆவது பிறந்த தினமும் இன்று

ஆகவே இப்பொங்கல் திருநாளில் சிறிது நேரமாவது படிக்கச் செலவிட வேண்டும்.

திருக்குறளின் முக்கியத்துவத்தை எமது குழந்தைகளுக்கு நாம் தெரியப்படுத்த வேண்டும்.

வாரம் ஒரு மணித்தியாலமாவது திருக்குறளைப் படிக்க வேண்டும்; அதன் பொருள் உணர்ந்து வாழ வேண்டும்.

குறள் நெறியின் வளர்ச்சிக்கு சுவிஸ் அறிஞர் டாக்டர் அல்பேர்ட் சுவைற்சர் பெரிதும் உதவினார். அதன் பின்னரே மேலைநாடுகள் குறளின் பெருமையை உணரத் தலைப்பட்டன.

14-1-1875 இல் பிறந்தவர் டாக்டர் சுவைற்சர்.

ஒவ்வொரு தமிழனும் திருக்குறளைத் தனது முதல் நூலாகக் கொள்ள வேண்டும்.

தமிழ்மொழியை உலகத்தவர் வியந்து பாராட்ட வைத்தவர் திருவள்ளுவர். அவர் மனித சமுதாயம் வாழ



திருவள்ளுவர்

வழிவகுத்தவர். அவரின் சிந்தனை சக்தியும் மனோதத்துவமும் அவர் இயற்றிய திருக்குறள் என்னும் நூலில் அருமையாக அமைவாக உள்ளன. மனித இனம் இன்பமாக மேன்மையுடன் வாழ்வதற்குத் திருக்குறள் உதவுகின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளாகத் திருக்குறள் ஒப்புயர்வற்ற தனிப்பெருமை வாய்ந்த நூலாக நிலவுவதோடு உலகப் புகழும்பெற்று உயர்வு பெற்றுலவுகின்றது. அறிவுநலம் பொதிந்த திருக்குறள் மனித குலத்துக்கு உறுதியான அறத்தை வற்புறுத்திக் கூறுகின்றது.

திருக்குறளை ஆதிப்பொது மறை என்றும், வழுவிலா மறை என்றும், உலக ஒழுக்க நூல் என்றும் பலவாறாகப் பாராட்டிப் போற்றிப் புகழ்வர். ஆதிப்பொதுமறையை அனுதினம் ஓதிப்பழகுவோம் என்று மக்கள் கவிமணி கூறுவர். அவ்வாறாயின் எண்ணமெல்லாம் திருக்குறளின் அடிப்படையில் எழுமாயின் வாழ்வெல்லாம் திருக்குறள் காட்டிய வளத்திலமையும். 'வள்ளுவர் வழியில் வையகம் வாழ்க' என்று பெரியோர் வாழ்த்துவதும் இதனாலே தான்.

திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பகுதிகளில் திருவள்ளுவர் நான்கு பொருள்களைக் கூறியுள்ளார். அறம், பொருள், இன்பம், வீடு என்பன மக்கள் நெறி அறிந்துஉய்திபெறுவதற்கான புருடார்த்தங்களாகும். திருவள்ளுவர் எல்லா மதங்களுக்கும் சம்மதமாகத் திருக்குறளைச் செய்திருக்கிறார். எனவே தான் சைவர், வைணவர், சமணர், பௌத்தர், இஸ்லாமியர், கிறிஸ்தவர் எல்லோரும் திருக்குறளைத் தத்தமக்கு அமைந்ததாக சான்று காட்டுகிறார்கள்.

இன்றைய பொதுவுடைமை, காந்தியம் போன்ற கோட்பாடுகளுக்கும் திருக்குறள் இடம்தருகின்றது. திருக்குறள் பக்தி நெறியையும் பகவானை வழிபடும் முறையையும் எல்லோருக்கும் ஏற்றமுறையில் வகுத்துக்கூறுவது. இல்லறம், துறவறம் எனவுள்ள வாழ்வுக்கும் திருவள்ளுவர் வழிகாட்டியுள்ளார்.

திருவள்ளுவர் குடும்பம் சமூகம் பிரதேசம் நாடு என்பனவுக்கப்பால் அகிலத்தை, வையகத்தை கருத்திற்கொண்டு உலகப் பொது மறையைத் தந்துள்ளார். மனிதகுலத்துக்குமன்பதைக்கு நல்வழி காட்டியவர் திருவள்ளுவர். ஒவ்வொரு துறையிலும் மனிதன் எவ்வாறு தன்னைவழிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று திருவள்ளுவர் வகுத்துக் கூறியுள்ளார். திருக்குறளிற் சொல்லப்படாதவை எவையும் இல்லை. திருவள்ளுவர் எல்லாவற்றையும் நிறைவாகக் கூறியுள்ளார்.

சுருங்கக் கூறின் தமிழ் மொழியிலும் பார்க்கத் திருக்குறள் உலக வியாபகம் அதிகமுள்ளது. தமிழ் தெரியாதவர்கள் பலர் திருக்குறளைத் தங்கள் தங்கள் மொழியில் மொழி பெயர்த்ததை படித்து இன்புற்றுத் தமிழ்படிக்க முயற்சி செய்கிறார்கள். எனவே, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நாம் திருக்குறளை மனனஞ்செய்து மறுவற உணர்ந்து நல்ல மனிதராகி வையகம்போற்ற வாழ்வாங்கு வாழ்வோமாக. ★

---

## கோமாதா நம் குலமாதா

பசுவைத் தெய்வமாகப் போற்றுவது இந்துக்களுடைய வழக்கம். எத்தனையோ விலங்குகள் இருக்க இதற்கு மட்டும் என்ன தனிச்சிறப்பு

பசுவின் பால் மிகச் சிறந்த உணவாகும்: இதைக் குழந்தைகளுக்குக்கூட கொடுக்கலாம். குறை எதுவும் இல்லாதது, போஷிப்பவர்களுக்கு தாராளமாக அது பால் தருகிறது. பசுவின் சாணம், கிருமிகளைக் கொல்லக் கூடிய சக்தி உள்ளது. அதனால் தான் வீடு மெழுக, வாசலில் தெளிக்க இதைப் பயன்படுத்துகிறோம். பசுவின் பால், நெய், சாணம், சிறுநீர், தயிர் ஆகிய ஐந்தையும் பஞ்சகவ்யம் என்று கூறுவார்கள். இது நோய் போக்கும் குணம் கொண்டது.

இவ்வளவு நல்ல இயல்புகள் பசுவிடம் இருப்பதால் தான் அதைப்போற்றுகிறோம்.

தொகுப்பு- க. கனகராசா

சஞ்சீவி சஞ்சிகை இம்முறை பொங்கல் மலராக வெளிவருகிறது. அடுத்தவாரம் சஞ்சிகை வழமையான அம்சங்களுடன் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை ஸ்வாமிகளின் ஆசிச் செய்தி



மக்கள் கொண்டாடும் திரு நாட்கள் பலவுள. ஆனல் தமிழர் திருநாள் என்பது பொங்கலையே குறிக்கும். இல்லங்கள் தோறும் தனி விழாப் பொலிவு பெறுவதும் இதுவேயாம்.

பகவன் என்ற சொல்லுக்கு பகவான், சூரியன், இறைவன் என்ற பொருள்களுமுண்டு. உலகத் தோற்றத்துக்கு முதற் காரணமானவர் இறைவன் என்றும் சூரியன் என்றும் இரு பொருள் கொள்ளும் வகையில் வள்ளுவப் பெருந்தகை அருளிப் போந்தார் போலும்.

சூரியனினின்றும் தோன்றியதே இவ்வுலகம் என்பது விஞ்ஞானிகளின் முடிபு.

தாய், தந்தையரைப் போல் கண்கண்ட தெய்வமாக விளங்குபவர் கதிரவன். எல்லா ஜீவராசிகளுக்கும் அவர் இன்றேல் இவ்வுலகில் வாழ்வில்லை. பஞ்ச பூதங்களும் அவரையே சார்ந்து இயங்குவன.

ஆதவன் தெய்வம் மட்டுமல்ல தன் ஒளியாலும்; மழையாலும் மாரி என்ற அமுதூட்டி உலகிற்கு நலன் செய்து தான் பெற்ற அனைத்தும் பிறர் நலத்துக்கென்று ஒதுக்கி வாழும் சுயநல மறுப்பான தூய வாழ்க்கையை எமக்கு உபதேசிக்கும் குருவும் ஆவார். எனவே வருடத்தில் ஒரு நாள் நன்றிக் கடனாக, மக்கள் அவர் உதயமாகும் நேரத்தில் பொங்கல் இட்டு பால்; பழங்கள், பலகார வகைகள் படைத்து பந்துக்களோடு அவரை உளமார வழிபட்டு அருள் வேண்டி மகிழ்வர்.

'எந் நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய் நன்றி கொன்ற மகற்கு'

ஒருவர் செய்த நன்றியை மறத்தல் கொலை செய்த பாபத்துக்கொப்பாகும் என்பதனைப் போலும் 'கொன்ற என்ற சொல்லை உபயோகித்து அவர்களுக்கு உய்வே இல்லை என அறுதியிட்டு அருளியுள்ளார் வள்ளுவப் பெருமான். செய் நன்றி மறந்தவர்களுக்கு நேர்ந்த கதியைத் தெளிவுறுத்துவது 'கந்தபுராணம்'.

தக்ஷனுக்கும் அவன் செய்த யாகத்தில் பங்கு கொண்ட தேவர்களுக்கும், பரம்பொருளிடம் அழியா வரங்கள் பெற்ற சூரபதுமன் ஆதியோருக்கும் இறுதியில் நிகழ்ந்தவை யாவருமறிவர்.

அடுத்துப் பட்டிப் பொங்கல். கோமாதாவாகச் சைவமக்கள் வழிபடும் பசு, விலங்கினத்தில் நடமாடும் தெய்வம். அதன் அங்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தெய்வம் உறையுமிடம் என்பது ஆன்ருேர் வாக்கு.

எனவே பசு வழிபாடு சிறந்த தேவாலய வழிபாட்டுக்கு நிகராகும்.

அர்ச்சனைக்கும், வேள்விக்கும் வேண்டிய பஞ்ச கௌவியங்களைத் தந்துதவி உலகம் இன்புறச் செய்பவை பசுக்கள். ஆ, பசு என்பது ஆன்மா; எனவே எம்முயிர் போல் ஓம்பப்படவேண்டியது பசு.

எல்லோரும் துன்பமின்றி இன்புற்றிருக்க இறை அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றேம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்
நல்லூர் திருஞானசம்பந்தர்
ஆதீன குருமஹா
சந்நிதானம்.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது
பொங்கல் நல்வாழ்த்துக்கள்

சகல ஆங்கில மருந்து வகைகளை
மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

வைஜி மெடிக்கல்ஸ்
520, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C/1220)




# பொங்கல் பண்டிகையின் வழிபாட்டு முறைகள்

மார்கழி மாதத்தின் இறுதி நாளோடு, மார்கழிப் பீடைகள் நீங்கி விடுகின்றன என்பதனலேயே, அந்த நாளைப் போகிப் பண்டிகையாகக் கொண்டாடுவர்.

அன்று வீட்டிலுள்ள வேண்டாத பழைய பொருள்களை எல்லாம் கழித்துக் கொளுத்துவது வழக்கம்.

போகிக்கு மறுநாள்தான் தை மாதம் முதல் திகதி தொடங்குகிறது:

தை மாதத்தை உத்தராயண புண்ணிய காலம் என்பர்.

பொங்கல் முதல் சூரியன், தென் திசையில் இருந்து வட திசை நோக்கிப் பயணம் செய்கிறது.

தை முதல் நாளை சங்கராந்தி அல்லது பொங்கல் என வழங்குவர். குறிப்பாக இந்தியாவில், தமிழகத்திலும் இலங்கையிலும் அது மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

பொங்கல் தினத்தன்று, தமிழ் உலகமெங்கும் இப்பண்டிகை மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படுகிறது.

அன்று சூரியனுக்கும் பூஜை செய்வர் தரையில் கோலமிடுவர். அதற்கு வடக்குப் பக்கம் சூரியனையும் தெற்குப் பக்கம் சந்திரனையும் வரைவர். அதற்கு மேல் பூசணிப்பூவை பசுஞ்சாணத்தில் அறுசம்புல்லுடன் வைத்துப் பூசிப்பர். சூரியனுக்கு உகந்தவை பூசணியும் அறுகம் புல்லுமாகும்.

பொங்கல் பூசைக்குத் தோகையுடன் கூடிய கரும்பு, வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, தேங்காய் முதலியன வைக்கவேண்டும்.

தை மாதம் பிறந்த பிறகு பொங்கல் பானையைச் சுற்றிலும் சுண்ணும்பு தடவுவர். அதில் சூரிய சந்திரன் படம் வரைவர். பிறகு அதற்கு மஞ்சள், குங்குமப் பொட்டு இடுவர். பாத்திரத்தின் கழுத்தில் இலைகளுடன் கூடிய மஞ்சள் கொத்தைக் கட்டி விடுவர். சர்க்கரைப் பொங்கல் செய்வதற்கு ஒரு பாத்திரத்தையும் உணவுச் சாதத்திற்கு ஒரு பாத்திரத்தையும் பயன்படுத்துவர்.

முதல் நாளே சமையல் மேடையையும் அடுப்பையும் தூய்மை செய்து கோலமிட்டு வைத்திருக்கவேண்டும். பொங்கல் பானையைக் கிழக்குப் பக்கம் வைத்துப் பாத்திரத்தில் முதலில் சிறிது பால் விடுவர். பிறகு, சிறிது வெல்லம் இடுவர். பால் பொங்கி வந்ததும் அரிசியைக் களைந்து இடவேண்டும்.

பொங்கல் சமயத்தில்; நாட்டில் வழமையாகக் காய்த்து அறுவடையான காய், கிழங்கு வகைகளைத்தான் சமையலுக்குப் பயன்படுத்தவேண்டும். முக்கியமாக அவரைக்காய், பூசணிக்காய், வள்ளிக் கிழங்கு, சேனைக்கிழங்கு, வாழைக்காய் ஆகியவற்றைப் பயன்படுத்துவர். பொங்கல் தினத்தன்று நான்கு வகைக் கறிவகைகள், பச்சடி, மோர்க் குழம்பு கூட்டு, வடை, சர்க்கரைப் பொங்கல் முதலியவற்றைச் செய்வது வழக்கம்.

சமையல் செய்து முடித்தவுடன். நைவேத்தியப் பொருள்களையும் வைத்து, சூரிய நாராயண பூசை செய்ய வேண்டும் ஒரு தலைவாழை இலையை விரித்து, அதில் செய்திருக்கும் எல்லாவற்றிலும் சிறிது இட்டுப் பிசைவர். பிறகு, அதில் இருந்து சிறிது எடுத்துக் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய நான்கு திசைகளிலும் இடுவர். அப்போது பொங்கலோ பொங்கல்! என்று எல்லோரும் உரத்துக் கூறுவர். அன்று சாதம் செய்த பானையைக் காலி செய்யக் கூடாது. பொங்கல் தினத்தன்று எண்ணெய் தேய்த்துக் குளிக்கக்கூடாது. தலைக்குத் தண்ணீர் விட்டுக் குளிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் சங்கராந்தி பீடை விலகும் என்பர். சங்கராந்தியன்று தந்தையற்றவர் தர்ப்பணஞ் செய்வர். இது வைதிக மரபு.

மாட்டுப் பொங்கலன்று, உழவுத் தொழிலுக்கு மிகவும் முக்கியமாகப் பயன்படும் மாடுகளுக்குப் பூசை செய்யப்படும். மாடுகளைக் குளிப்பாட்டி. கொம்பு சீவி, அதில் வண்ணம் தீட்டி, சலங்கைகள் கட்டி அலங்கரிப்பர். மாட்டுக் கொட்டில் பொங்கல் இட்டுப் பூசிப்பர். ★

('இந்துப் பண்டிகைகளின் வரலாறும் வழிபாட்டு முறைகளும்'- என்றநூலில் இருந்து)

1939 - 1989

50 வருடங்களாக யாழ் நகரில் முதன்மைபெற்ற ஸ்தாபனமாக விளங்கியும், இணையற்ற சேவையும் செய்துவரும் பாரத் ஸ்ரூடியோ ஸ்தாபனத்தார், பொன்விழாவில் காலடிவைக்கும் இவ்வேளையில் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தமது

இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்ளுகிருர்கள்.

சிறந்த புகைப்படங்களுக்கு
அன்றும் இன்றும் என்றும்
பாரத் ஸ்ரூடியோ
82/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கும், வீடியோ ரெக்கோடிங் செய்வதற்கும் பாடல்கள் பதிவுசெய்வதற்கும் வீடியோ படங்கள் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளவும்
சிறந்த இடம்
பாரத் வீடியோ சென்ரர்
51/1, கன்னுதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (C1202)

அன்பு பெருகிட
நண்பர்களுக்கும்,
வாடிக்கையாளர்களுக்கும்
எமது இனிய
பொங்கல் நல்வாழ்த்துக்கள்
இன்றைய நவநாகரிகத்திற்கேற்ற
வீட்டுத்தளபாடங்களுக்கும்
RPCO சீஎஸ்ரு
மெத்தை வகைகளுக்கும்,
சிறந்த ஸ்தாபனம்
யாழ். ரேடிங் கொம்பனி
79, கஸ்தூரியார் றேட்,
யாழ்ப்பாணம். (C/1213)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள்;
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய
பொங்கல் நல்வாழ்த்துக்கள்
ATHAVAN TRADING COMPANY
ஆதவன்
ரேடிங் கொம்பனி
General Merchant Commission Agents & Co-operative Suppliers.
11/5, (37) ஸ்ரான்லி றேட்,
யாழ்ப்பாணம்.
(C/1206)

ஓங்குக உண்மை பெற்றிடுக நன்மை!
எமது வாடிக்கையாளர்களுக்கும்,
நண்பர்களுக்கும்
இதயம் கனிந்த
பொங்கல்
நல்வாழ்த்துக்கள்
ரவி அன் ராஜ்
சில்க்ஸ்
77, பெரியகடை, 'ரகுராமன் பில்டிங்'
யாழ்ப்பாணம்.



நவீன நாகரிகத்திற்கேற்ற வெளிநாட்டுத் துணிவகைகள்,
திருமணத்திற்கான இந்திய பட்டுச்சேலைகள்,
றெடிமேட் சேட், ட்ரவுசர், ஜப்பான் சேலைகளும்
உங்கள் மனத்திருப்தியுடன் தேர்ந்தெடுக்கச்
சிறந்த ஸ்தாபனம்
Ravi And Rajh Silks
77, Grand Bazaar, 'Ragu Raman Building'
Jaffna
தொலைபேசி: 22378. (C/1098)

பொங்கல் திருநாளாம் இந் நந்நாளில் எல்லோரும் இன்புற்றிருக்க எமது வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும்
★ இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள் ★



ராணி ஜுவல்லர்ஸ்
ஆடர் நகைகள் குறித்த நேரத்தில்
செய்துகொடுக்கப்படும்.
63, கன்னுதிட்டி, [R. [illegible]], யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23544 (C/1095)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொள்கையுடன்பொங்குவோம்!

எண்ணமெல்லாம் வானுலகில் பறந்தபோது
ஏதேதோ இதயத்தைப் பிழிகையிலே
திண்ணமுடன் தைமாதம் பிறந்ததுவாய்
திருவிழியில் ஓர்காட்சி தெளிகையிலே
உண்ணவுண வில்லாத ஓர் கூட்டம்
உலகமெலாம் உலாவுகின்ற தோற்றமங்கே
விண்ணெல்லாம் தோற்றுகையில் சூரியனும்
விரைந்தோடி வெளிப்பட்டு வந்தானன்றே.

நானிருக்க நல்லதொரு நிலமிருக்க
நாடெல்லா முழைப்பிருக்க நல்லவர்கள்
தானிருக்க தரணிதனில் உணவின்றி
தனிமனிதன் இருப்பதற்கோ இடமுமில்லை
ஊனிருக்கு முடம்புடனே வாழ்கின்ற
உத்தமரே ஒருசொற் கேளீர்?
ஆனிருக்கு ஏரிருக்கு விளைவிருக்கு
அவலமதை இன்றுமுதல் தீர்ப்போம் நாமே.

போனதெல்லாம் போகட்டும் நம்மினமே!
பொறுமையுடன் உழைத்திடுவோ மிங்கேவாரீர்
ஆனதெல்லாம் ஆதவனு லென்கின்ற
ஆளமுடைக் கருத்ததனை உளத்திற் கொண்டு
தேனெனவே திசையெலாம் உணவளித்து
தேசமதை காப்பதற்காய் இவ்வருடம்
கோனெனவே நாமெல்லாம் வாழ்வதற்காம்
கொள்கையுடன் தைப்பொங்கலை வழி விளக்கும்
- யான் பொங்குவோமே.

சிங்கை ஆழியான்

## மண்ணை நினைத்து உள்ளம் குளிர்வோம்!

நிலநலம் நீர்வளம் நிறைவுள தாயினும்
நிம்மதி யெனும்பலம் நிதியினும் நிறைவாம்
இலவச அரிசியில் இயற்றினும் பொங்கல்
இறைவனும் இரவியை என்றும் துதிப்போம்!!
ஊரும் உலகும் ஒன்றுபட்டாலே
உழவும் சிறக்கும் உரமும் பிறக்கும்!!!

உடலுக் குறுதி உடல்தா னென்றே
ஊனைப் புசிக்காதே
கடலை பயறு காய்கறி கீரை
கருதிப் புசிப்பாயே!
உண்ணும் போதே மண்ணை நினைந்து
உள்ளங் குளிர்வாயே
மண்ணில் நல்ல வண்ணம் வாழ
மனதைக் கொள்வாயே!

நிலத்தைக் கொத்தி நெல்விதைத்தேன்
நீரைப் பாய்ச்சிப் பயிர்வளர்த்தேன்
பயிரைக் காத்தே கதிரெடுத்தேன்
கதிரைக் கூட்டிப் பொலியடித்தேன்
பொலியை ஏற்றிப் பொங்கலிட்டேன்
பொங்கல் நாட்டிப் பூஜை செய்தேன்
பூஜை யூட்டிப் போற்றிசெய்தேன்
பொருளா தாரம் வேண்டுமென்றே!

கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை

## குறளின் பொங்கல்

தங்கப் பிழம்பாய் தகதகத் தகாயமாய்
பொங்கி வெளிவரும் முழுமணிப் புதையலாய்
வானின் கீழே வட்டப் பரிதி
தானே எழுந்து தாவுமுன் காலை!

முன்னிருள் வானில் முழக்க இரவெலாம்
மின்னிக் கிடந்த மென்பொடித் துகள்தாம்
காலையில் உதிர்ந்து காண்பன போலும்
கோல வெண்மணல் கொஞ்சு முற்றத்தில்
பரணி அடுப்பில் பானையும் புதிதாய்க்
குறள் நெறி உழவன் கொள்ளை மகிழ்வொடும்
பொங்கல் இட்டுப் பொங்குக என்று
மங்கலத் தமிழில் மணிச் சொல் முழங்கினன்!

கண்ணில் எழுச்சியும் கருத்தில் உணர்ச்சியும்
பண்ணில் மலர்ச்சியும் பால் போல் பெருகும்
அன்னவன் முன்னே அவன் குலக் கொழுந்தாம்
சின்னஞ் சிறுவன் செங்கரும் பொன்றை
ஏந்தி வாயில் இட்டுக் கடிப்பதில்
சாந்தியும் தவழச் சார்ந்திருந்தான்

கரும்பை அவன்வாய் கடிக்கக் கடிக்கப்
புறம்பாய்ச் சாறவன் பூவிதழ் மார்பெலாம்
வழிய வழிய வனமுழக் காட்டிற்று!
விழியில் கூர்ந்திதை வேடிக்கை பார்த்தவன்
சிந்தையும் எங்கோ சென்று படர்ந்தது!
சந்தைக் கரும்புச் சாற்றில் அவன் மகன்
இன்றுடல் குளித்தான் இதைக் காண்பதற்கே
அன்றவன் குளித்தான் அதுவே வியர்வை

உழைக்க இறங்கும் ஒவ்வொரு நாளும்
மழைக்குள் நனையும் மரம்போல் வியர்வை
அரும்பு கட்டிப்பின் அருவியாய்க் கொட்ட
விரும்பி அதைக்கை விரல்களால் வழித்துத்
தூர எறிந்து தொடர்ந்தே உழைப்பில்
சேரக் கருத்தும் செலுத்திய தெல்லாம்
சிந்தையிற் படமாய்ச் சிரித்து விரிந்தது!

விந்தைதான் கரும்பில் வெளிவரும் சாறு
வெண்ணிறம் ஆயினும் விளைச்சல் கரும்போ
எண்ணிறச் செம்மை ஏற்றிக் கிடந்தது
உடலின் குருதியே உழைப்பில் இளைத்துப்
படலின் மிசைப்பூம் பனி போல் வியராய்
வெளிவரும் உண்மையை விளக்கிச் சென்றது!
தெளிவுற உணர்ந்தான் தெய்வக் குறளினை

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல் பவர்'

— செல்வி பூங்கொடி அருளம்பலம் —

~~~~~ கவியரங்கம் ~~~~~




## உழைப்பவர் திழைக்கும் வாழ்நாள்

தைமகள் பிறந்த இந்நாள்
தமிழரின் வாழ்விற் பொன்நாள்
செய்யவள் வந்து இல்லம்
செழிப்புறச் செய்யும் நன்நாள்

வெய்யவன் கதிரின் வெப்பில்
விளைந்தெழில் பொங்கும் மண்ணுள்
வையகத்(து) உழவர்க் கெல்லாம்
வழங்கிய திருநாள் இந்நாள்

பச்சையை உடுத்துப் பூத்துப்
பல்சுவை விருந்து வைத்து
உச்சமாய் இயற்கை அன்னை
உலகினை ஓம்பும் ஓர்நாள்

செய்தொழில் சிறப்பு எய்தித்
தேர்ச்சியும் சிறப்பும் பெற்று
உய்தெழில் உவகை பொங்க
உழைப்பவர் திழைக்கும் வாழ்நாள்

செந்நெலும் பருப்பும் பாலும்
சேர்ந்துறு மனைகள் தோறும்
கன்னலும் இஞ்சி மஞ்சள்
கட்டியே பொங்கும் தைநாள்

உழைப்புநல் லூக்கம் நேர்மை
ஒற்றுமை பண்பு வாய்மை
அழைப்பிது! மக்கட் கெல்லாம்
அரியதோர் பொங்கல் வாழ்த்து.

— நயினைக் கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை

## சுற்றம் வாழப் பொங்குகவே!

'ஒற்றுமையுள்ளம் பெறவே அன்பும்
பொங்கப் பொங்குகவே
சுற்றம் வாழச் செயல்கள் புரியப்
பொங்கல் பொங்குகவே
கற்றறி கண்ணிய மிகவே தெரிய
பொங்கல் பொங்குகவே
இற்பெருவாழ்வினினிமை பெறவே
இன்பம் பொங்குகவே''—

— கவிஞர் நா ஆறுமுகம்

## உதயன் புகழ் கூறும் பொங்கல்

ஏர் பிடித்தோர் எங்கும்
எழுச்சி யுற்று ஓங்கிடவே
பாரெங்கும் பொங்கும்
பசும்பால் புது அரிசி
ஊரெங்கும் இருள் அகற்றும்
உதயன் புகழ் கூறிப்
பூரித்துத் தமிழர் இல்லம்
பூத்துக் குலுங்கும் பொங்கல்!

— நெடுந்தீவு லக்ஷ்மன்

## புதுமைப் பொங்கல்

தைமகள் வருகை கண்டு
தமிழர்கள் உவகை கொள்வர்
மெய்யவள் தீண்டும் போது
மேவிடும் இன்பம் என்பர்

புதுக்கதிர் நெல்லைக் கொண்டு
பொங்கியே மகிழ்ந் திருப்பர்
புதுமைகள் காண நெஞ்சம்
பொங்கியே விம்மி நிற்பர்

புத்தாடை தரித்து நின்று
பொலிவுடன் விருந்துவைப்பர்
பழைய துன்பங்க ளெல்லாம்
பறந்திட விரும்பி நிற்பர்

முத்தமிழ்க் கவிதை பாடி
முத்தங்கள் தந்தே பிள்ளை
முல்லையின் சிரிப்பில் துன்பம்
முழுவதும் மறந்து போவார்

நடப்பவை எல்லாம் நன்றே
நடந்திட வேண்டி நிற்பர்
துடிப்புடன் வேலை செய்ய
துணைவனுய்சூரியனைகொள்வர்

எம்தமிழ் இனிமை போலே
இனித்திடும் பொங்கல் உண்டு
செந்தமிழ் மக்கள் வாழ
செல்வங்கள் சேர்த்து நிற்பார்

- வ. யோகானந்தலிங்கம்

## எதிர்பார்ப்பு!

வந்து வந்து எத்தனையோ
தைகள் போச்சு
ஒன்றுமாறி ஒன்றொன்றாய்
உயிர்கள் போச்சு
அங்குமிங்கும் ஓடியதில்
வாழ்நாட் போச்சு
சொத்துக்கள் சொந்தங்கள்
சூறை போச்சு
பிஞ்சினிலே எத்தனையோ
பிரிஞ்சு போச்சு
பிரிந்தவர்கள் சேரப்
பல நாட்கள் போச்சு
பிறந்த மண் சுடுகாட்டின்
கோலமாச்சு
நிம்மதியை அனைவருமே
வேண்டியாச்சு
எஞ்சியுள்ள இனத்துக்காய்
இனிமேற்தானும்
எழுச்சியுறும் தை இதுவாய்
மலர்ந்திடாதோ?

-செவ்வந்தி மகாலிங்கம்

## தைமகளே வருக!

தைத் திங்கள் எனும்
நங்கையே வருக!
எத் திறமும் போற்றும்
ஏந்திழையாள் வருக!
நற் கரும மாற்ற
நல் வழியைக் காட்டி
பொற் கரத்தை நீட்டி
பொங்கலோ பொங்கல்
பொங்குக பொங்கல்

தீமையது விலக்கி
திருவருளைப் பொழிந்து
நன்மையே நினைந்து
நானிலம் போற்ற
உண்மையாய் உழைத்த
உழவர் திருநாள்
பொங்கலோ பொங்கல்
பொங்குக பொங்கல்!

கண்ணை இமை
காப்பது போல்
எம்மை என்றும்
காத்திடவே
நின்று நிதம்
தாள் பணிந்தோம்
தை மகளே வருக
கை நிரம்பத் தருக
பொங்கலோ பொங்கல்
பொங்குக பொங்கல்!

நன்றி உணர்ச்சி பொங்க
நின்று நாங்கள் உமையே
என்றும் பணிந்தோம்
ஏத்தியே துதித்தோம்
பரிதியே போற்றி எம்
சுருதியே போற்றி என்று
கருதியே பொங்கல்
பொங்கியே படைத்தோம்
பொங்கலோ பொங்கல்
பொங்குக பொங்கல்!

கள்ளமில்லா உள்ளமதில்
களிபே ருவகை கொண்டு
எண்ணமெல்லாம் நல்லதையே
நாடி நிற்க வென்று
உதய சூரியனை
உளமார வணங்கி
பொங்கலோ பொங்கல்
பொங்குக பொங்கல்

—ஸ்ரீ நிதர்ஸன்


அன்பு, ஆதரவு சிறந்துவிளங்க
நண்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்
எமது
பொங்கல் நல்வாழ்த்துக்கள்
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்
முருகன்
ஆபரண மஹால்
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.
(C/1212)

இடர்கள் நீங்கி இனிய சுகம் பெற
வாடிக்கையாளர்களுக்கும்
நண்பர்களுக்கும்
எமது இனிய
பொங்கல் வாழ்த்துக்கள்.
க.செ. கைலாசம்பிள்ளை
அன் சன்ஸ்
மருந்துச் சரக்கு வியாபாரம்,
76, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(C/1211)

அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
மற்றும் அனைவருக்கும் தமது உளங்கனிந்த
பொங்கல் நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறார்கள்
சப்பறம், மணவறை அமைப்பாளர்
S. S. சர்மா அவர்கள்
உங்கள் மறக்கமுடியாத மகிழ்ச்சிகரமான
வைபவங்களுக்கு ஏற்ற
சப்பறம், மணவறை, பூந்தண்டிகை,
பந்தல் சேவை, பந்தல் சோடினை, கதிரைகள்
என்பன வாடகைக்கு விடப்படும்.
என்றும் உங்களுக்குச்சேவை நல்கக் காத்திருக்கும்
S. S. சர்மா
முருகமூர்த்தி வீதி,
சங்கானை.
(C/1275)

பொங்கலோ பொங்கல்! இனிய தைப்பொங்கல்!
வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும்
எமது இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்
'JOY' Enjoy with Joy
Fruit & Milk based Drinks naturally good everytime for all occations & daily use
For Quality, Nutrition & Taste try 'Joy' Orders will be delivered.
பழங்கள், பாலில் தயாரிக்கப்பட்ட 'ஜோய்' குளிர்பானங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
எல்லாவகையான வைபவங்களுக்கும் தரமான, சத்துள்ள, ருசியான குளிர்பானம்
ஜோய் குளிர்பானம்
Distributed by — ஏகவிநியோகஸ்தர்கள்:
NALLUR FARM CENTRE
JOY
C/o நல்லூர் வீடியோ சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
Manufactured by — தயாரிப்பாளர்கள்:
TABBASCO INDUSTRIES
21, Chapel Road, Nugegoda
(C/1236)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
~~~~~

யாழ் நகரில்...

வெலிங்டன் சந்திக்கு அண்மையில்
மணிக்கூட்டு வீதியில் அமைந்திருக்கும்
யாழ் றிக்கோ
சுவீற் அன் கிறீம் ஹவுஸ்
ஸ்தாபனத்தார்

தம் வாடிக்கையாளர்களுக்கு தித்திக்கும்
பொங்கல் வாழ்த்துக்களைத்
தெரிவிக்கின்றுர்கள்

தம் வாடிக்கையாளர்களுக்கு தரமான உணவுவகைகளை வழங்குவதில் முன்னணி வகிக்கின்றுர்கள் என்று வாடிக்கையாளர்களே பாராட்டும் நிறுவனமாகி விட்டது.

காலை உணவாக:

இடியப்பம், இறைச்சிக்கறி, பாண், பருப்புக்கறி, சிவிச்சம்பல், கிழங்குக்கறி, என்பனவும், தரமான ஐஸ்கிறீம் வகைகளையும் சர்பத் குளிர்பானங்களையும் வழங்குகிறுர்கள். தரமான பாண் விற்பனை செய்வதில் முதலிடம் வகிக்கிறுர்கள். வாடிக்கையாளரை இன்முகத்துடன் வரவேற்கிறேம்.

யாழ் றிக்கோ சுவீற் அன் கிறீம் ஹவுஸ்
இல: 352, மணிக்கூட்டு வீதி,
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.
(C/1100)

# சூரியபகவானுக்கு நன்றி கூறும்

# திருநாள் - பொங்கல்

இந்துக்களின் பண்டிகைகள் எதுவும் வெறுமனே கொண்டாட்டத்திற்காக ஏற்படுத்தப்படவில்லை. அவற்றில் அறிவியல். ஆத்மீக, உலகியல் உண்மைகளே அடிநாதமாக விளங்குகின்றன.

இவற்றின் மூலம் பலநூற்றுண்டுகளுக்கு முன்பே இந்துக்கள் அறிவியலில் எவ்வளவோ மைல் கற்கள் முன்னேறியிருந்தனர் என்பது தெளிவாகின்றது.

அந்த வகையில் தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, ஆடிப்பிறப்பு என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.

இன்று தைப்பொங்கல் தினமாகும். இந்துக்கள் அனைவரும் வைகறைத்துயிலெழுந்து, சூரிய பகவானுக்குக் கோலமிட்டுப் பொங்கலிட்டுப் படைத்து வழிபாடு செய்து வருவர்.

இதற்கு அடுத்தநாள் மாட்டுப் பொங்கல் தினமாகும். அன்று கோமாதாவிற்குக் குளிப்பாட்டி அலங்கரித்துப் பொங்கலிட்டுப் படைத்து வழிபாடு செய்து வருவர்.

இவ்வாறு சூரிய பகவானுக்கும் கோமாதாவிற்கும் வழிபாடு செய்து வருவதற்கான தினங்களே முறையே தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல் தினங்களாகக் கொண்டாடப்படுகின்றன.

இந்துக்கள் என்றுல் அவர்கள் நாள்தோறும் வழிபாடு செய்ய வேண்டியவர்கள்தான். அப்படியிருக்கும்போது இதற்கு மட்டும் ஏன் இவ்வளவு முக்கியத்துவம்.

தைப்பொங்கலை உழவர் திருநாள் என்பர் சிலர். தமிழர் திருநாள் என்பர் சிலர். இதுவரை தனது உழவுத்தொழிலை விருத்தி செய்வதற்கு வேண்டிய மழைபெய்வதற்குக் காரணமாக இருந்த சூரியனுக்கு நன்றி செலுத்துவதற்கு என ஏற்படுத்தப்பட்டதே தைப்பொங்கல் தினம்.

அத்துடன் தன்னுடன் உடன் பிறப்பாக நின்று உழைத்து உதவிய கோமாதாவிற்கு நன்றி செலுத்துவதற்கு என்று ஏற்படுத்தப்பட்டதே மாட்டுப் பொங்கல் தினம்.

இவ்வாறு எம்மில் பலர் சொல்லிக் கொண்டிருக்கின்றேம். ஆனுல் இது யதார்த்த ரீதியில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. கருமம் முடிந்து பயன் பெறுகின்ற போதுதானே நன்றிக்கடன் செலுத்த முடியும்.

ஆனுல் தைப்பொங்கல் தினத்திற்கு முன்னர் எந்த வயலிலாவது அறுவடை செய்யப்படுவதில்லை. புதிர் எடுப்பதற்குக் கூட தைப்பொங்கல் தினத்திற்குப் பின்னர் வருகின்ற தைப்பூசத் தினத்தையே கைக்கொள்கின்றேம். நன்றிக் கடன் என்ற கருத்து இங்கே அடிபட்டுப் போகின்றது.




வயலில் உழுது உதவிய மாட்டிற்கு நன்றி செலுத்துவதாயின் எருது மாட்டிற்கு அல்லவா பூசை செய்யவேண்டும். ஆனுல் இங்கே கோமாதாவிற்கல்லவா கொண்டாட்டம் நடைபெறுகின்றது.

இந்துக்களின் கொண்டாட்டங்கள் எதுவும் அர்த்தமற்று ஆரம்பிக்கப்படவில்லை. ஆலய வழிபாட்டையே கொண்டாட்டங்களாக ஏற்படுத்திக்கொள்பவர்கள் இந்துக்கள். இங்கே தைப்பொங்கலின் அடிப்படை உண்மை எதுவாக இருக்கும்?

### அறிவியல் உண்மை

பூமி உருண்டை வடிவமானது: அது தன்னைத்தானே சுற்றும்போது இரவும், பகலும் உண்டாகின்றது: சூரியனைச் சுற்றுவதனுல் பருவ காலங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு 15ம் நூற்றுண்டின் பின்னர் வந்த விஞ்ஞானிகள் சொல்கின்றுர்கள்.

ஆனுல் பல நூற்றுண்டுகளுக்கு முன்பிருந்தே இந்துக்கள் அதனைக் கண்டு கொண்டார்கள் என்பதை தைப்பொங்கல் தினம் எமக்கு உணர்த்துகின்றது.

சூரியன் வடக்குத் திசையில் இருந்து தெற்கு நோக்கிச் செல்வதை உத்தராயண

**- கற்கோவளன் -**

காலம் என்று சொல்வர். அவ்வாறுன பிரயாணத்தைக் கடக இராசியில் இருந்து சூரியன் ஆரம்பிக்கும்போது (விஞ்ஞானிகளின் கருத்துப்படிக் கற்கடக ரேகையில் இருந்து) ஆடிப்பிறப்பு கொண்டாடப்படுகின்றது:

சூரியன் தெற்கில் இருந்து வடக்கு நோக்கிச் செல்லும் காலத்தை தக்ஷிணுயனகாலம் என்பர். இவ்வாறுன பிரயாணத்தைச் சூரிய பகவான் மகர இராசியில் இருந்து ஆரம்பிக்கும்போது (விஞ்ஞானிகளின் கருத்துப்படி மகர ரேகையில் இருந்து) தைப்பொங்கல் தினம் கொண்டாடப்படுகின்றது.

கற்கடக ரேகையில் இருந்து சூரிய பகவான் தனது பிரயாணத்தை ஆரம்பிக்கும்போது மாரிகாலம் ஆரம்பிப்பதால, வரப்போகும் மாரிகாலம் எமக்கு வளமானதாக அமைந்து போதிய மழையைத் தரவேண்டும் என்றும், மகர ரேகையில் இருந்து சூரிய பகவான் தனது பிரயாணத்தை ஆரம்பிக்கும்போது கோடைகாலம் ஆரம்பிப்பதால் வரப்போகும் [illegible] மான வெப்பத்துடன் எம்மைப் பாதுகாக்க வேண்டும் என்றே வழிபாட்டை மேற்கொள்வதாகக் கொள்ள வேண்டும்.

இதிலிருந்து இந்துக்கள் அறிவியல் துறையில் பல நூற்றுண்டுகளுக்கு முன்பே பல மைல் கற்கள் முன்னேறியிருந்தனர் என்பதை விஞ்ஞானிகள் ஒப்புக்கொள்ளவேண்டும்.

### ஆத்மீக உண்மைகள்

மானிடர்களுக்கு ஒருவருடம் தேவுக்களுக்கு ஒரு நாள். அந்த வகையில் தேவுக்களின் இராப்பொழுது ஆடிமாதம் ஆரம்பமாகி மார்கழி மாதத்துடன் முடிவடைகின்றது. மார்கழி மாதம் வைகறைப் பொழுதாகும்.

இதனுலேயே மானிடர்களும் மார்கழி மாதத்தில் வைகறைப் பொழுதில் துயிலெழுந்து நீராடி மார்கழி நோன்பு நோற்கின்றனர். தைமாதம் முதல் திகதி வரும் தைப்பொங்கல் தினம் தேவுக்களின் உதய காலமாகும். அப்போது அவர்கள் சூரிய பகவானை வழிபடுவர். அதிகாலையில் நாம் சூரிய வழிபாட்டை முடித்துக் கொண்ட பின் அடுத்துச் செய்யவேண்டிய கடமை கோமாதா வழிபாடாகும். இதனையொட்டியே தைப்பொங்கல் தினத்திற்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல் தினம் கொண்டாடப்பட்டு கோமாதா பூசை செய்யப்படுகின்றது.

இதன்படி, வீட்டுக்கு ஒரு பசு வளர்ப்போம் என்ற கருத்து புராண காலத்தில் இருந்தே செயற்படுத்தப்பட்டு வருவதை உணரமுடிகின்றது. ★

இன்பம் எங்கணும் இனிதாய் மலர
வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும்
எமது இதயம் கனிந்த
பொங்கல் நல்வாழ்த்துக்கள்
சகலவிதமான புடவைத் தினிசுகள்
கூறைச்சேலைகள்
சிறுவர், ஆண், பெண்
அனைவருக்கும் ஏற்ற
பெல்ஸ், மிடிஸ்கேட்
மற்றும்
றெடிமேட் உடைகளுக்கும்
இறக்குமதி செய்யப்பட்ட
✯ சிங்கப்பூர் நைலெக்ஸ்
✯ மக்ஸி ✯ ரிசேட்
இன்னும் பல தினிசுகளுக்கும்
மணியர்ஸ்
16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23545
கிளை: 54 A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். C/1097

வறுமை நீங்கி செல்வம் பெருகிட
எமது இனிய
பொங்கல் வாழ்த்துக்கள்
தரமானதே சிறந்தது என்றுல்
சொலிட் பம்பையே வாங்குங்கள்
மற்றும் மின் உபகரணங்களையும்
வாங்கிப் பயனடையுங்கள்
சொலிட் பம்ப், மின் உபகரண
விற்பனையாளர்:
LINGAM & CO.
111, Stanley Road,
Jaffna.
(C/1231)

வறுமை நீங்கி வளம் பெருக
எமது வாடிக்கையாளர்களுக்கும்
நண்பர்களுக்கும்
இனிய பொங்கல்
நல்வாழ்த்துக்கள்.
சிறந்த கறுப்பு, வெள்ளை படங்களுக்கும்
கலர்படங்களுக்கும்
நீங்கள் நாடவேண்டிய ஸ்ரூடியோ
நியூசித்திரகலா ஸ்ரூடியோ
70, கே. கே. எஸ் றேட்,
சுன்னுகம்.
(C/1209)

பொங்கல் திருநாளில் அன்புபெருகி எல்லோரும் இன்புற்றிருக்க அனைவருக்கும்
பொங்கல் நல்வாழ்த்துக்கள்
லிங்கம்
கூல் பார் அன் கோப்பி பார்
✯ ஸ்பெஷல் ஐஸ் கிறீம் ✯ ஐஸ் சொக் ✯ ஐஸ் சர்பத்
✯ ஐஸ் கோப்பி ✯ பைனப்பிள் ஜூஸ் ✯ ஒரேஞ் ஜூஸ்
✯ நெல்லிக் கிறஷ் ✯ பிடா ✯ மட்டன்றேல் ✯ லிங்கம் பட்டர்கேக்
LINGAM
COOL BAR & COFFEE BAR
52, Clock Tower Road, Jaffna.
(C/1099)

துன்பம் நீங்கி வளமான வாழ்வுபெற இன்றைய பொங்கல்
திருநாளில் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது
இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
வீடு கட்டுவதற்கு ஏற்ற பூக்கல்லு, ஓடு, செங்கல்லு
மற்றும் தரமான கட்டடப் பொருட்களின் விற்பனையாளர்கள்
மு. தா. சோமசுந்தரம் அன் சன்ஸ்
199, மின்சாரநிலைய வீதி, — யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 33845
கிளை — கல்வியங்காடு
ஆடியபாதம் வீதி,
நல்லூர்
தந்தி ''பாதுகாதேவி''
(C/1229)

துன்பங்கள் நீங்கி எல்லோரும் இன்புற்றிருக்க
பொங்கல் திருநாளாம் இந்நந்நாளில்
வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், அன்பர்கள், நகைப்பிரியர்கள்
அனைவருக்கும் எமது உளங்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றேம்.
செல்லையா சிவபாதலிங்கம்
வைரக்கல் நகைவியாபாரம்
புதுப்பொலிவுடன் 22 கரட்டில் ஓடர் நகைகளை
குறித்த தவணையில் செய்துகொள்ள

CHELLIAH SIVAPATHALINGAM
JEWELS MERCHANT
220 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23794
(C/1230)

பொங்கும் மங்களம் எங்கும் தோன்றிட பொங்கல் திருநாளாகிய
இந்நன்நாளில் எமது வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும்
எமது இனிய
பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
கே. கே. வி.

யாழ்ப்பாணம் நகை மாளிகை
தங்க வைர நகை வியாபாரம்,
82/4, கஸ்தூரியார் வீதி — யாழ்ப்பாணம்.
தங்கப் பவுண் வைர நகைகள்
எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்
ஓடர்கள் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.
K. K. V. Jaffna Jewel House
82/4. Kasthuriar Road. —Jaffna
தொலைபேசி 021 — 22362
(C/1096)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நாகரிகத்தின் முதிர்வினை விளக்கும் தைப்பொங்கல் திருநாள்

கனகசபாபதி நாகேஸ்வரன் எம். ஏ.
(விரிவுரையாளர். தமிழ்த்துறை)

இலக்கியங்களும் புராண-இதிகாசங்களும் சூரியக் கடவுளைப் பற்றிப் பேசுகின்றன.

கண்ணகி கோவலன் கொலையுண்டபோது 'காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என் கணவன்' என நீதி கேட்டுப் புலம்புவதாக ஒரு குறிப்புச் சிலப்பதிகாரத்திலே உண்டு.

'நீதி' மாறுதது; உலகத்திற்குப் பொதுவானது. எனவே அது சமயத்தோடு பிணைந்தது.

சைவமும் பிறமதங்களும் போற்றிய இயற்கை அதீத நிகழ்வுகள் இன்றும் உயர்ந்த நீதி கூறுவனவாகவே விளங்குகின்றன.

சோதி, சுடர், ஒளி, கிரணம், விளக்கு என்பன இறைவனோடு இணைத்துப் பேசப்பட்டுள்ளதைக் காணும்போது ஒளிமயமான பேரின்பப் பொருளையே இறையாகக் கொண்டனர் என்பது புலப்படும்.

பஞ்சபூதச் செயற்பாடுகள், கோள்களின் செயற்பாடுகள் என்பன மனிதகுல வாழ்க்கையினைப் பெரிதும் தாக்கமுறச் செய்கின்றன:

நிகழ்ந்த நிகழ்வுகளின் தொகுப்பாக காலாதிகாலமாகத் தமிழ் மக்கள் விஞ்ஞான அடிப்படை உண்மைகளைப் புரிந்து கொண்டு ஏற்படுத்திய விழாவே பொங்கல் திருநாள்:

நன்றி, நாகரிகம்; பக்தி, பண்பாடு மற்றும் பாசம் ஆகிய உணர்வுகள் வெளிப்படும் உன்னதயான திருநாள் பொங்கல் திருநாளாகும்.

மனித நாகரிகத்தின் முதிர்வினை விளக்கி நிற்பது பொங்கல்.

ஆதிமனிதன் வேட்டுவ நிலையில் இருந்து வளர்ச்சி பெற்று மறுமலர்ச்சியும் நாகரிகமும் அடைந்து நீரின் பயன்பாட்டையும் எருது மாட்டின் பயன்பாட்டையும் பெற்று உழவர் நிலைக்கு உயர்ந்ததனை விளங்கி நிற்பது பொங்கலாகும்.

மனித இனத்தின் அறிவு மலர்ச்சி ஆரம்பத்தில் வெறும் மூடநம்பிக்கைகளாகவும் சடங்குகளாகவுமே நிலவின:

கண்மூடித்தனமான, அறிவுலகமேற்றுக்கொள்ளாத நம்பிக்கைகள் ஆராய்ச்சி மதிநுட்ப வளர்ச்சியின் காரணமாக முதிர்நிலையினை அடைந்துள்ளமையை நாம் இன்று கண்டு கொள்ளலாம். அத்தகு இருநிலைமைகளின் இயல்புகளையும் கொண்டு விளங்குவது பொங்கல் திருநாளாகும்:

பொங்கல் விழா உழவர் திருநாள். சோதிவழிபாடு சூரிய நீவழிபாடு. தமிழர்க் குரிய — இந்துக்களுக்குரிய பெருவிழாவாகும். இது புறநிலைப் பரிமாணம். இதன் அகநிலைப் பரிமாணமே இன்று சுமங்கலிகளால் நிகழ்த்தப்படும் திருவிளக்குப் பூஜை. எல்லாமே உள்ளொளி பெருக்குவதற்கான செயற்பாடுகளேயாம்.

### புது முயற்சியின் ஆரம்பம்

தமிழ் கூறும் நல்லுலகம் தைத்திங்கள் தோறும் பொங்கலை நினைவுகூர்ந்து வருகிறது.

மனிதனுலே முயலப்படும் பொருளாதார வளப்பெருக்கத்திற்கான முயற்சிகளுக்கு அளிக்கும் அறுவடையின் குறிப்பினை பொங்கல் திருநாள் விளக்கி நிற்கிறது.

விவசாயம் சம்பந்தமான அறுவடைகளே பெரிதும் தொடர்புபடுவனவாயினும், இன்று 'தைத்திங்கள்' பிறக்கின்றதென்பதால் வெளிநாட்டுப் பயணம் புதிய தொழில், அரசியல் சுதந்திர விடிவு' புதிய சமுதாயத் தோற்றம் என்பனவும் சிறப்புற்றமைய வேண்டுமென வழிபடும் சிறப்புமிகு நாளாகவும் மிளிருகிறது.

சொந்த முயற்சியின் பலாபலனை நெஞ்சு குளிரக்கொண்டாடவரும் திருநாளே பொங்கல்

அடிப்படைத் தேவைகளுள் ஒன்றான உணவை விளைவிப்பதற்கு மனிதன் பூமியுடன் போர் புரிகிறான் அந்த விளைவுப்போரினால் பெற்ற பெறுபேற்றினை நல்ல முறையில் தருவிக்க முற்றுவிக்க உறுதுணை புரிந்த இயற்கையைக் கௌரவித்து வணங்கும் தினமே பொங்கல் திருநாள்.

### வாழ்விக்கும் சூரியன்

சூரியன் ஒளிமயமானவன். அண்டசராசரங்கள் அனைத்திற்கும் அக்கினிக் கோளத்தின் நிலையில் நின்று தெறிகிரணங்களால் உயிர்கொடுப்பவன். மானுடர்க்கும் பயிர் வகைக்கும் பயன்களைத் தருபவன்.

ஆக்கலையும் முதிர்வையும் முடிவையும் தன் இயக்கத்திறல் செய்துமுடித்து முறை செய்து காப்பவன்தான் சூரிய பகவான். இச்செயல்களை யாரேனும் அவனிடம் கேட்டுப் பெற்றிலோம். அவனது இயல்புக்குணமே வாழ்விப்பதுதான்.

### பொங்கல் கால்கோள்விழா

பொங்கல் தினமானது பல்வகைகளினதும் புதிய வகைகளையும் சம்பிரதாயங்களையும் வாழ்க்கை வழிகளையும் கண்டு கொள்ள வகை செய்யும் ஒன்று.

வீட்டினிலே என்றும் மங்கல தீபம் ஏற்றக்கூடிய வகையில் நிலைமை இருக்கவேண்டும் என்றும்—

மாதர் எல்லோரும் மஞ்சள், குங்குமத்துடன் ஒளிவீசி இருக்கவேண்டும் என்றும்,

இறைவனுடைய திருவருளானது மனித காரியங்களுக்கு எல்லாம் துணைபுரியவேண்டும் என்றும்—

நீதி, மாண்பு, அறம், திறம் ஆகியன வளரவும் பொங்கலை ஒரு'கால்கோள்'விழாவாகவே தமிழர்கள் கொள்ளுகின்றனர்.

# தைபிறந்தால் வழி பிறக்கும்

சாந்தாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

விட்டு விருந்தையில் நின்று ரேட்டைப் பார்ப்பதும், உள்ளுக்குப் போவதுமாக இருந்தாள். நேரம் செல்லச் செல்ல அவள் மனம் கலவரம் அடைந்தது.

'ஏழு மணியாகப் போகுது. இவனை இன்னும் காணேல்லை. நாளைக்குப் பொங்கல். தலைக்கு மேலே வேலை இருக்கு. சர்க்கரை வாங்கப் போனவனை இன்னும் காணேல்லை' என்று சத்தம் போட்டவள் கணவனைப் பார்த்தாள்.

அவர் பத்திரிகையில் வந்த குறுக்கெழுத்துப் போட்டியில் தன்னை ஐக்கியப்படுத்தி மெய்மறந்து இருந்தார். சாந்தாவிற்குப் பொறுக்க முடியவில்லை, 'எப்ப பார்த்தாலும் குறுக்கெழுத்துப் போட்டி'

இராமநாதன் நிமிர்ந்து பார்த்தார். அலட்சியப் பார்வையுடன் 'இது உனக்குப் புரியாது. அதுக்கு கொஞ்சமாவது அறிவு வேணும். கடவுள் உனக்கு மூளையைப் படைக்க முன்பு பிறந்திட்டாய். உன்னைச் சொல்லிக் குற்றமில்லை' என்றார்.

அப்போதுதான் கேற்றைத் திறந்து கொண்டு வந்த சுதாகருக்கு அப்பா சொன்னது கேட்டது. அவனையறியாது பாட்டுப் பாடியபடி வந்தான்.

'உன்னைச் சொல்லிக்
குற்றமில்லை
என்னைச் சொல்லிக்
குற்றமில்லை
காலம் செய்த கோலமடி
கடவுள் செய்த குற்றமடி'

சுதாகரின் குரலைக் கேட்ட சாந்தா 'உனக்கு எப்ப பார்த்தாலும் கண்டறியாத பாட்டு' என்றாள்.

'அம்மா இது நான் பாடவில்லை கவிஞர் கண்ணதாசன் அப்பாவுக்காகப் பாடியது. அப்பா படுகிற கஷ்டத்தைப் பார்த்துப் பாடினார்' என்றான்.

'சும்மா அலட்டாதை. நாளைக்குப் பொங்கல். தலைக்கு மேலை வேலையிருக்கு. நான்தான் ஒண்டியா எல்லாம் செய்ய வேண்டும்' என்று அலுத்துக் கொண்டாள்.

'நீ ஏனம்மா தனியாச் செய்யணும். அதிகாரப் பரவலாக்கம்னு கேள்விப்பட்டிருக்கிறயா? அதிகாரத்தைப் பகிர்ந்து குடு. குசினி வேலையை நீ பார். உமா விட்டைக் கழுவட்டும். அப்பா பொங்கல் அடுப்பு வேலையைச் செய்யட்டும். நான் கசுக்கொட்டை, பிளம்ஸ் துப்பரவு பண்ணுறன்' என்றான் சுதாகர்.

'அம்மா பொங்கலுக்குக் கசுக்கொட்டை பிளம்ஸ் இருக்காது. தின்னப்போறன். அதுக்குத்தான் அடிகோலுகிறன்' என்றாள் உமா.

அம்மா பொறுமையிழந்தாள். 'சும்மா கதையை விட்டுட்டு வேலையைப் பாருங்கோ உமா நீ கோலம் போட ஆயத்தம் பண்ணி வை' என்றாள்.

சுதாகர் அட்டகாசமாகச் சிரித்தான்.

'உமாவா? கோலமா? அது அலங்கோலம்' என்றான்.

'டேய் வாயை மூடு. ஒரு வயசுப் பெண்ணை இப்படியா சொல்லுறது' அம்மா அதட்டினாள்.

'வயசுப் பெண்ணா? எக்கச்சக்கமாகத்தான் வயசாச்சு. தை பிறந்தாலாவது வழி பிறக்கும்' என்றான் சுதாகர்.

கேற்றைத் திறந்துகொண்டு வந்த மாமா 'யாருக்கு வயசாச்சு' என்று கேட்டபடி வந்தார்.

'உமாவுக்குத்தான் மாமா. வேற யாருக்கு' என்றான் சுதாகர்.

'அவள் குழந்தை போன மாதம் தானே பத்தொன்பதாவது பேர்த்டே கொண்டாடினாள்' என்றார்.

மாமா கடந்த மூன்று வருடமாகப் பத்தொன்பதாவது பேர்த்டே என்றுதான் சொல்லுறாள். இன்னும் இரண்டு வருடத்திற்குப்பிறகு தான் இருபது வரும்' என்றான் சுதாகர்

மாமா அவன்ரை அலட்டலை விடுங்க ஏன் மாமா பொங்கலுக்கு எல்லாம் றெடியா' என்று கேட்டாள் உமா.

இந்த முறை நாங்க பொங்கேல்லை' என்றார் மாமா.

'ஏன் மாமா அடுப்புக் கிடைக்கவில்லையா? என்று கேட்டான் சுதாகர்.

அவனுடைய பேச்சைக் கவனியாது மாமா சொன்னார்' மாமிக்கு ஹேர்ணியா: டாக்டரிடம் காட்டினார்'

மாமா தொடர்ந்தார்' அது தான். அதுக்கு ஒப்பரேசன் செய்யக்கொண்டு போனனான். ஆனா ஹேர்ணியா இல்லையாம். ஏதோ கட்டியாம்' என்றார்.

மாமா இது ஒப்பரேசன் லிபரேசன்' என்றான் சுதாகர். தொடர்ந்து 'மாமா போனமுறை பொங்கல் கிழக்குப் பக்கம் சரிஞ்சது. அம்மாவுக்குப் பெரிய சந்தோஷம்' என்றான்.

- வில்வம் பசுபதி -

### பொங்கல் சித்திரம்

'அம்மா நாங்க இந்தமுறை பட்டிப் பொங்கலும் பொங்கணும்' என்றாள் உமா.

எல்லோரும் சிரித்தனர். மாமா சொன்னார் 'பட்டிப் பொங்கல் மாடு வளர்ப்பவர்கள் பொங்குவது. உங்களிடம் மாடு இல்லை கோழி தான் இருக்குது'

'அது சரி எப்ப தைப்பூசம் பிள்ளைக்குக் காது குத்தணும்' எனறார் மாமா,

'உமா பஞ்சாங்கத்தைப் பார். அன்டைக்கு நீ மூக்கையும் குத்து' என்றான் சுதாகர்.

அம்மா அதட்டினாள். கதையைவிட்டுட்டு பொங்கல் அலுவலைப் பாருங்கள்' என்று சொல்லிக் கலைத்தாள்.

'பொங்கல் பொங்கிப் படைக்கும் வரைக்கும் அம்மாவுக்கு கையும் ஓடாது காலும் ஓடாது' என்றபடி அம்மாவைப் பின் தொடர்ந்தான்: ★


வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது இனிய
பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.




புஸ்பா ரான்ஸ்போட்
(பிறைவேட் லிமிட்டெட்)

வாடிக்கையாளர்களுக்கும் அன்பர்களுக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

உங்கள் பொதிகளை விரைவாகவும், குறைந்த கட்டணத்துடனும், பாதுகாப்பாகவும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழுப புக்கும் கொண்டு செல்வதற்கு,

கொழும்பில்:
162, ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு - 13.
தொலைபேசி இல: 33524

(C/1201)

புஸ்பா ரான்ஸ்போட்
101, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23584

நண்பர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும்
எமது அன்பு கனிந்த
பொங்கல் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.




அண்ணா கோப்பியின் 100கிராம் வெற்றுப் பக்கெட்டுக்களில் 10 ஐக் கொடுத்து 1 ரம்ளரை இனமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அண்ணா
இன்டஸ்ரீஸ்
இணுவில்
(C/1219)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் ஏற்றத் தாழ்வைப் போக்கும் பண்டிகைகள்

'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்பது பழமொழி.

எந்தத் தெய்வத்தை நாம் கொண்டாடுகிறோமோ, அந்தத் தெய்வம் நம்மை வாழவைக்கும்; நாம் மகிழ்ச்சியாகவும் ஆனந்தமாகவும் வாழ்க்கை நடத்தவும் அருள் செய்யும்.

இந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன.

பண்டிகைகள் என்பவை பழங்காலத்தில் இருந்து, உலகமக்களால் கொண்டாடப்படும் திருவிழாக்களாகும். பண்டு என்றால் 'பழைமையானது' என்று பொருள். இந்தப் பண்டிகைகள் இயற்கையின் பருவகாலங்களுக்கு ஏற்ற வகையில் கொண்டாடப்பட்டு வந்தன — கொண்டாடப்பட்டு வருகின்றன.

பண்டிகைகள் மக்களிடையே இருந்து வரும் ஏற்றத் தாழ்வைப் போக்குவதற்குப் பயன்பட்டன. மேலும் அவை இயற்கையின் பருவ காலங்களில் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் அவ்வப் பருவ காலத்தில் கிட்டும் தாவரங்களையும் அவற்றின் பயன்களையும் புதுமை மாறுவதற்கு முன்பே பயன்படுத்தவும், பருவகாலத்துக்கு ஏற்றவாறு தம் வாழ்க்கை முறைகளை வகுத்துக் கொள்ளவும் மக்களுக்குப் பயன்பட்டன.

எனவே, ஒவ்வொரு பண்டிகைக்கும் ஏதேனும் ஒரு சிறப்புக்குரிய முக்கியத்துவமும் தாற்பரியமும் உண்டு. தனிமனித நல்வாழ்வையும் சமூகத்தின் நல்வாழ்வையும் கருதியே, மிகவும் சிந்தனையுடன் நம் முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டவை தாம் இந்தப் பண்டிகைகள். ★


எமது
இதயம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்

ரெருசோ ஷிப்ஸ்
(TERRAZZO CHIPS)
✶ வெள்ளை சீமெந்து
✶ கலர் பவுடர் (PIGMENTS)
✶ பித்தளை அலுமினியம் பட்டி
தரைவெட்டும் மெசின்

ரூபா 12/- மேல்

நம்சன்ஸ்

443, Old Moor St. Colombo 12.
தொலைபேசி: 31511 — 34411

வாடிக்கையாளர்கள் அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவருக்கும்

எமது

இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

"ஹொட்டல் சோபிகா"
HOTELS SOPIGA
410, Hospital Road,
Jaffna.
(C/1210)

வாடிக்கையாளர்கள் அன்பர்கள்
ஆதரவாளர்கள்
அனைவருக்கும்

எமது
இனிய பொங்கல்
வாழ்த்துக்கள்

கல்யாணி கிறீம் ஹவுஸ்
73, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.
(C/1208)

வளம் பெருகி வறுமை நீங்கிட
வாடிக்கையாளர்களுக்கும்
நண்பர்களுக்கும்
எமது
பொங்கல் வாழ்த்துக்கள்

தரமான கறுப்பு வெள்ளை படங்களுக்கும்
கலர் படங்களுக்கும்
முப்பது வருட அனுபவம் பெற்ற
சிறந்த ஸ்ருடியோ


பிறின்ஸ் ஸ்ருடியோ
கே கே. எஸ். ரோட்,
சுன்னாகம்.
(C/1214)

பொங்கல் வாழ்த்துக்கள்

சகல ஆங்கில மருந்துவகைகளையும்
மொத்தமாகவும், சில்லறையாகவும், பெற்றுக்
கொள்ள நாட வேண்டிய சிறந்த ஸ்தாபனம்

இந்திரபாலாஸ் பார்மஸி
108, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.
(பழைய பொலீஸ் நிலையம் முன்பாக)
(C/1246)

உழவர் திருநாளாம் இப்பொங்கல்
நன்னாளில் அன்பும் அமைதியும்
அருளும் இன்பமும் பொங்க
எமது உளங்கனிந்த
பொங்கல் நல்வாழ்த்துக்கள்!




CEYGMA PUMPS
சிக்மா பம்ப்ஸ்
UNITED AGRO ENGINEERING
274/1 Hospital Road,
Jaffna.

Factory:-
NAVATKULY
KAITHADY
(C/1288)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய பொங்கல் வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்!

புரோட்டீன் நிறைந்த
புரோட்டீனெக்ஸ்®
பக்கெட் ஒன்றை
இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158


புரோட்டீனெக்ஸ்® 56% தாவர
புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும்
அவசியமான விற்றமின்களும் தாதுப்-
பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது

சில்லறை விலை
ரூபா 68/55
125 கிறாம்
Pfizer
®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




Grant BJK&E PFL 1157

'செறி' சுவை கொண்ட,
வளர்ந்தோருக்கான
டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட
பிள்ளைகளுக்கான
டியூரோல்®

தினமும் டியூரோல்® அருந்துங்கள்.
அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

சில்லறை விலை
ரூ. 37/50 200 மி. லி.
Pfizer
சில்லறை விலை
ரூ.39/90 200 மி. லி.
®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

தமிழ் பேசும் பெருங்குடிமக்கள் அனைவருக்கும்
லீலாவின் பொங்கல் வாழ்த்துக்கள்

பற்பல சித்திரங்களுடனும் புதுப்பொலிவுடனும்
லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்கள் வெளியாகியுள்ளன.
இதுவரை எமது தயாரிப்புக்களான லீலா கலண்டர்கள்,
டயறிவகைகளைப் பெறாத அன்பர்கள்
உடன் ஆடரை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

நியூ லீலா அச்சகம்
'சின்னத்துரை கட்டிடம்'
182, மெசஞ்சர் வீதி,
கொழும்பு - 12
தொலைபேசி: 25930

லீலா ஸ்ரோர்ஸ்
72ஜீ, மக்கள் நவீனசந்தை,
கொழும்பு - 11
தொலைபேசி: 540842

பொங்கல் திருநாளில் அன்பு பெருகி
எல்லோரும் இன்புற்றிருக்க

எமது வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும்

இனிய பொங்கல் வாழ்த்துக்கள்



யப்பான் ஜுவலர்ஸ்
(க. ஆறுமுகம்பிள்ளை அன் சன்)
64, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22518
(C/1094)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரபு அகதி முகாம்களில் பிறந்தவர்களே

# இன்றைய பலஸ்தீன விடுதலைப் போராளிகள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

29 - 11 - 1947 இல் ஐ நா. வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி இஸ்ரவேல் அரசு பிரகடனப்படுத்தப் பட்டது. அதே வேளையில் பலஸ்தீன அரபுகள் தங்களுக்கென அரபு அரசு ஒன்றை அமைக்கும் உரிமை மறுக்கப் பட்டது.

இந்தப் பின்னணியில் 1948 – 49 காலப் பகுதியில் யுத்தம் ஒன்று வெடித்தது. யூதர்களினல் அரபு மக்கள் மீது தொடுக்கப்பட்ட இந்த யுத்தத்தில் பிரித்தானிய ஏகாதிபத்தியம் யூத இன வெறியர்களுக்கான தகுந்த ஓர் உந்து விசையாக விளங்கியது.

பலஸ்தீனம் முழுவதும் எமக்கே என யூதர்களும், அல்ல; எமக்கே என பலஸ்தீன அரபுக்களும் யுத்தத்தில் ஈடுபட்டனர்.

இந்த யுத்தம் வளர்ச்சியடைய முற்பட்டிருந்த ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் இருந்தும்,

அரும்பும் புதிய தேசியவாதப் போக்கில் இருந்தும் மத்திய கிழக்கு மக்களைத் திசை திருப்பிவிடும் என்பதை நன்கு உணர்ந்த ஏகாதிபத்தியவாதிகள் அந்த யுத்தத்தை ஆதரித்தனர்.

தேவையான ஆயுதங்களையும் இஸ்ரவேலுக்கு வழங்கினர். இஸ்ரவேலுக்கு எதிரான இந்த யுத்தத்தில் அரபு நாடுகளான எகிப்து, ஈராக், சிரியா, லெபனன், சவூதி அரேபியா ஆகியன பெரும் தோல்வியடைந்தன.

### தோல்விக்குக் காரணம்

அரபு நாடுகளின் தோல்விக்குப் பிரதான காரணிகளாக அரபு மக்களிடையே காணப்பட்ட பிற்போக்குச் சக்திகளின் முரண்பாடுகளும் யூத இராணுவத்துக்கு பிரித்தானியா வழங்கிய உதவிபட்டவ. அதனல் பெருட்களும் அமைந்தன.

ஐ. நா. அறிக்கையின்படி இந்த ஆக்கிரமிப்பு யுத்தத்தின் போது பிரதான அரபு நகர, கிராமப் பகுதிகளில் இருந்து சுமார் 7 லட்சம் பலஸ்தீனியர் வெளியேற்றப் பட்டனர். ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரபுக்கள் கொல்லப்பட்டனர். 400 பலஸ்தீனியக் கிராமங்கள் அழிக்கப் பட்டன. சுமார் 2 ஆயிரத்து 500 சதுர மைல் பிரதேசம் இஸ்ரவேலியர்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. வெளியேற்றப்பட்ட பலஸ்தீனியர்கள் அயல் அரபு நாடுகளில் அகதிகளாகப் புகலிடம் கோரினர். இதனல் பலஸ்தீனியர் பிரச்சினை புதிய பரிமாணம் பெற்றது.

அடுத்ததாக 1956 இல் நடைபெற்ற சூயஸ்கால்வாய் யுத்தம் இஸ்ரவேலின் அடுத்த முக்கியமான ஆக்கிரமிப்பாகக் குறிப்பிடலாம். 31 - 10 – 1956 இல் பிரித்தானியா, பிரான்ஸ் ஆகியவற்றின் பின்னணியுடன் இஸ்ரவேல் எகிப்து மீது போர் தொடுத்தது. தாக்குதல்களுக்குள்ளான நகரங்கள் பலஸ்தீனிய அகதிகள் வாழ்ந்த எகிப்திய நகரங்களாகவே காணப்பட்டன.

செய்ரோ, போட்செய்ட் ஆகிய நகரங்கள் மீது விமானத் தாக்குதல்கள் நடத்தப் வில் அரபுகளின் உயிர், உடைமைகளுக்குச் சேதம் ஏற்படுத்தப்பட்டன. இதன் தொடர்ச்சியாக 5 – 6 – 1967 இல் ஆரம்பமாகி நடைபெற்ற ஆறுநாள் யுத்தம் மிக முக்கியமாகிறது.

அப்போது எகிப்து, சிரியா, ஜோர்டான் ஆகிய அரபு நாடுகள் மீது இஸ்ரவேல் தாக்குதல் நடத்தியது.

### காஸா மேற்குக்கரை

இந்த யுத்தத்தின் போது தான் எகிப்துடைய காஸா (Gaza) நிலப்பகுதி, சினய் குடாநாட்டுப் பகுதி (Sinai penin sula, ஜோர்டானின் மேற்குக்கரைப் (West Bank) பகுதி, சிரியாவின் கோலான் குன்று பிரதேசம் (Golanheig hts) ஆகியன இஸ்ரவேலின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டன. அவற்றின் விஸ்தீரணம் சுமார் 25 ஆயிரம் சதுர மைல். இதனல் அங்கு இருந்து வெளியேறிய அரபு அகதிகள் அயல் அரபு நாடுகளிலும் முகாம்களிலும் தஞ்சம் அடைந்தனர்.

இஸ்ரவேலியத் துருப்புக்கள் 1967 ஜூனில் ஜோர்டானின் ஹெப்ரான் (Hebron) நகரினுள் பிரவேசித்தபோது பலஸ்தீன மக்கள் பெரும்பாலானேர் அப்பகுதியைவிட்டு வெளியேறினர்.

யூதர்களுக்கு எதிரான போராட்டத்தில் ஆரம்ப காலம் முதல் பெரும் பங்கு வகித்தவர்கள் இந்த ஹெப்ரான் நகர மக்களே ஆவர். இதனல் இஸ்ரவேலிய இராணுவம் இந்நகருக்குள் புகுந்தமையினல் ஏற்படப்போகும் அழிவுகளை உளவியல் ரீதியாக உணர்ந்ததினல் இந்நகர மக்கள் அகதிகளாக வெளியேறினர்.

ஐ நா. சபையின் தரவின்படி அக்கால கட்டத்தில் சுமார் 17 லட்சம் பலஸ்தீனியர் அகதிகளாக வெளியேறினர்.

இதன் தொடர்ச்சியாக 1973 ஆம் ஆண்டு மேலும் ஒரு யுத்தம் நடத்தது. இதுவும் வழமைபோல் அரபு மக்களுக்கு பெருமளவில் உயிர், உடைமை, நிலப்பகுதி இழப்புக்களை ஏற்படுத்திவிட்டே தோல்வியில் முடிவடைந்தது.

**கு. ரஞ்ஜகுமார்**
(உதவி விரிவுரையாளர் — யாழ் பல்கலைக்கழகம்.)

இவ்வாருக மூன்று தசாப்த காலத்துக்குள் நான்கு பாரிய யுத்தங்களின் விளைவுகளை பலஸ்தீன அரபுக்கள் அனுபவித்தனர்.

இவற்றுக்கு அடிப்படையாக, ஆரம்பகால வல்லரசாக இருந்த பிரித்தானியாவின் திட்டமிட்ட நலன்காக்கும் முயற்சிகளும், 2ஆம் உலக மகாயுத்தத்தின் பின்னர் வல்லரசாக எழுச்சியடைந்த தற்போதைய உயர் வல்லரசான அமெரிக்காவினதும், சக ஏகாதிபத்திய நோக்கம் கொண்ட அரசுகளின் தேசிய நலன்பேண் ஆர்வமே அடிப்படையாக அமைந்தன.

அமெரிக்காவின் உதவி இஸ்ரவேலுக்குப் பக்கபலமாக இருந்தது. அதுவே இஸ்ரவேலின் ஆக்கிரமிப்பு தொடருவதற்கு அடிப்படையாக இருந்தது. இதன்படி அரபு - இஸ்ரவேல் பிரச்சினை, அமெரிக்காவினதும் இஸ்ரவேலினதும் நலன்பேண் நடவடிக்கைகள், முயற்சிகளினல் தனது வளர்ச்சிப் பாதையில் முன்னேறியது.

இஸ்ரவேலின் ஆக்கிரமிப்பைத் தடைசெய்து பிரச்சினையைத்தீர்ப்பதற்காக கெய்ரோ உடன்படிக்கை; மெல்காட் உடன்படிக்கை, காப்படேவிட் உடன்பாடு, றேகன் சர்மா தானத் திட்டம் ஆகிய சமரச முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டது. இருந்தும் அவை யாவும் எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை.

### பலஸ்தீன விடுதலை இயக்கம்

1948 முதல் பலஸ்தீன அரபுகளுக்கு எதிராகத் தொடுக்கப் பட்ட யுத்தங்களின் விளைவாக பலஸ்தீனியர்கள் தமது தாயகத்தை விட்டு அகதிகளாக வெளியேறி அயல் அரபுப்பிரதேசங்களில், விசேடமாக அமைக்கப்பட்ட அகதிமுகாம்களில் வாழ்ந்தனர்.

கடந்த 40 ஆண்டுகளாக முகாம் வாழ்க்கையின்போது இந்த அகதி முகாம்களில் பிறந்தவர்களே இன்றைய பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் Palestine Liberation Organisation P L O) விடுதலைப் போராளிகளாவர்.

அகதிகளான பலஸ்தீன அகதிகளே தேசிய தாயகம் ஒன்றை அமைத்து உரிமைகளை நிலைநாட்ட இன்று போராடிவருகின்றனர். அதற்கான ஓர் இயக்கமாக பலஸ்தீன விடுதலை ஸ்தாபனம் என்ற ஓர் அமைப்பை 1964இல் அவர்கள் உருவாக்கினர்

ஆரம்பகாலங்களில் குற்றங்கள் செய்வோரைக் கண்டிப்பவர்களாகவும் விமர்சிப்பவர்களாகவும் இஸ்ரவேலிய துருப்புக்களுடன் ஒத்துப் போவோர்களைத்தண்டிப்பவர்களாகவும் இவர்கள் காணப் பட்டனர்.

1967களின் பின்னரே ஆயுதப்போராட்டத்தில் அக்கறை கொண்டவர்களாக மாறினர். அதன் பின்னரே தீவிரமான ஓர் ஆயுத அரசியலைஅங்கு அவதானிக்க முடிகிறது.

ஆரம்பகாலத்தில் பலஸ்தீனியக் குழுத் தலைவர்களிடையே காணப்பட்ட ஆதிக்கப் போட்டி பலஸ்தீனியரின் தோல்விக்கு ஒரு காரணம் எனலாம். 1960 களின் பின்னரே இத்தலைவர்களினல் தம்மத்தியில் ஓர் ஐக்கிய அமைப்பினை ஏற்படுத்தமுடிந்தது.

### ஐக்கிய அமைப்பு

இக்காலப் பகுதிக்குள் குடியேற்றங்களை அமைப்பதிலும் இராணுவ ரீதியான ஆக்கிரமிப்பிலும் யூதர்கள் குறிப்பிடத்தக்க அளவு வெற்றியை அடைந்திருந்தனர்.

இவ்வாறு காலம் பிந்திய தோற்றமான பலஸ்தீன விடுதலை இயக்கம் தமது பிரச்சினைக்கு நியாயபூர்வமான தீர்வினை வேண்டி இரண்டு பிரதான கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறது.


★ பலஸ்தீன மக்களுக்கு ஒரு தனிநாடு வேண்டும்:

* ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பிரதேசங்கள் மீண்டும் பலஸ்தீன மக்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

இவையே அவ்விரண்டு கோரிக்கைகளாகும்.

இவற்றை நிறைவேற்றுமுகமாக பல உலக நாடுகளின் அங்கீகாரம், ஆதரவுடன் 1967 களின் பின்னர் (Yasser Arafat) யாசிர் அரபாத் தலைமையின் கீழ் பலஸ்தீன விடுதலை ஸ்தாபனம் இயங்கி வருகிறது.

பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் தற்போதைய நிலை பற்றிய விவரம் அடுத்தவாரம்)

இலங்கை வங்கியின் பிள்ளைகளின் சேமிப்புத் திட்டத்தில் இன்றே சேருங்கள்.

உங்கள் பிள்ளையின் வளமான வருங்காலத்திற்கு வழிகோலுங்கள்!

உங்கள் பிள்ளைக்கு வருங்காலத்தில் ஏற்படக்கூடிய பணத்தேவைகளை அது நம்பிக்கையுடன் எதிர்நோக்க இப்போதிருந்தே நீங்கள் வழிசெய்வது உங்கள் முக்கிய கடமையாகும்.

கவர்ச்சிகரமான வட்டியை வழங்கும், இலங்கை வங்கியின் பிள்ளைகளின் சேமிப்புத் திட்டத்தைப் பயன்படுத்தி உங்கள் பிள்ளையின் பெயரில் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

இந்தத் திட்டத்தின் மூலம், பலவருடச் சேமிப்பும் அத்துடன் சேரும் வட்டியும் ... தேவையான ... உதவும்.

இலங்கை வங்கியில், ஆகக் குறைந்த வைப்புத்தொகையாகிய ரூ.-100/- ஐச் செலுத்தி மிக இலகுவில் கணக்கை ஆரம்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு, இன்றே உங்களுக்கு அண்மையிலுள்ள இலங்கை வங்கிக் கிளை முகாமையாளரைச் சந்தியுங்கள்.

சந்தைப்படுத்தல் முகாமையாளர்
22-வது மாடி ஜனதிபதி மாவத்தை
கொழும்பு-1

இலங்கை வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரடெனியா இன்ஸ்ரிரியூட்
கொக்குவில்.
A/L 89, 90
அளவையியல்
திரு. சந்திரராசா
புவியியல்
திரு வேலாயுதபிள்ளை
அரசியல்
திரு. செபராஜா

சஞ்சீவி
சஞ்சிகை

14 - 01 - 1989 சனிக்கிழமை

பேரடெனியா இன்ஸ்ரிரியூட்
கொக்குவில்.
A/L 89, 90
பொருளியல்
பகுதி II சென்மதிநிலுவை
ஆரம்பம்: 18 - 1 - 89
திரு. கலாகரன்

# இதயச்சுமைகள் பொங்கல் தணலிலே தகிக்கட்டும்!

நீலவானப்பந்தர் நெடுங் கடலோடு கொஞ்சும் தொடு வானம். அதை நோக்கிப் போக நெடுந் தொலைவுக்கு எட்டாத ஏமாற்றும் வீறு நடை. நீண்டு பரந்து ஆழ்ந்த நீலக்கடலும் - சியாமள வண்ணனின் படுக்கையை உதறி விரிக்கும் பாங்கு.

மென்துதிவாய அலைசூழ்ந்த ஆழி சூழ் உலகம். இடை இடையே எத்தனையோ இத மான காட்சிகள் அந்தமாட்சி யிலே மயங்கும் மனோலயம்: இயற்கையன்னையின் கொலு விருக்கை.

இப்படி தெளிந்த வர்ணம் போல வரையாத ஓவியங்கள், செதுக்காத சிற்பங்களின் ஒயிலான தோற்றம். எண்ணிறந்த உயிர்க்குலங்கள். மனிதன் தொட்டு மருக் கொழுந்துவரை, எறும்பி லின்று யானையிறுதியாக மண் தொட்டு விண்வரை அரியவும் பெரியவும் சிறியவுமான விசித் திர அமைப்புகள்.

கைபுனைந்தியற்ற கவின் பெறுவனப் பெலாம் பளிதம் தான்' ஓசையும், ஒலியும், முனகலும், அழுகையும்இடை யிடையே சிட்டின் சிறப்பு, புலினிகளின் ஒற்றுமை(Seven-sisters) எல்லாம் எம்மைப் பார்த்து நகைப்பது போன்ற நளினப் பார்வை.

### மனிதன் என்ன நினைக்கிறன்?

ஆயின் மனிதன் என்ன நினைக்கிறன், எதை உணர் கிறன்-உணர்த்துகிறன் தான் பெரியவனென்று. இவன் ஈண்டுவதெல்லாம் சிறப் பென்ற பெருமிதம் விளைவு யுத்தபயம். இவ்வுலகை வேரோடு சாய்க்கவேண்டினர் பாரதி.

அவரவர் முகத்திலே கவலை ரேகைகள். நெற்றியிலே கவலைச் சுருக்கங்கள் எழுதி ஒட்டியபடி உலவுகிறன். உண் டும் உண்ணவில்லை, தூங்கியும் தூக்கமில்லை. பீதி - அவலம் தான் கண்டமிச்சம். கருமேகத் திரையில் மின்னல் கீறுபோல் பளிச்சிடும் கவலைச் சுவடுகள் அவை.

அலுத்துப்போன நிலை நிழ லாடும்போது, வந்தகாரி யத்தைக் கைநெகிழவிட்டு, வழிமாறிப் போன பறவை களாயின மனித சமுதாயம். கிழக்கிலிருந்து மேற்கேயும், மேற்கிலிருந்து கிழக்கேயும் படையெடுப்பு. ஒன்று அச்சம். நிம்மதியின்மை

அதோ அந்தப் பசுக்கள் சொரியும் பால் கன்றுக்குக்கூட இல்லாமல் கறந்தாலும் பசு சுகிப்பதில்லை. நறுமணமிக்க மலர்கள் நெஞ்சை அள்ளு கின்றன. ஆனல் அனுபவிப் பவன் மனிதன்தானே, மழை பொழிகின்ற முகிற் கூட்டங் கள், அமிர்தமன்ன நீர்வளங் கள், ஆறுகள், தடாகங்கள். ஊற்றுக்கள் எல்லாம் நீரினல் ஏதேனும் பயன் பெறுகின் றனவா?

### எவ்வளவு சுயநலம்

இவ்வாறு கைமாறு கருதா சேவைசெய்யும் இயற்கையை நாமெல்லாம் மறந்து சொந்த நலமொன்றையே கருத்திற் கொள்கிறேம். எவ்வளவு சுய நலம் எமக்கு? உணவு அளிக் கும் சுவையான பழங்களை நல்கும் தாவரங்களின் தன் னல மறுப்பு எம்மை உறுத்த வில்லையே? இப்படி ஒருமுறை நோட்டம் விட்டால் அல்ப மனிதகுலம் வெட்கப்பட வேண்டுமன்றோ!

பரநலமிக்கச் சான்றோர்கள் இப்படிப் பேசுகிறார்கள். இறைவா! உயிரினங்களின் வாழ்வுக்குத் தேவையான எத்தனையோ செல்வங்களை வாரிவழங்கும் கருவூலம்தானே தாங்கள் எம்மை வாழவைக் கும் தாங்கள் எமது தாயும் தந்தையுமன்றே. எமது நெறிப்படுத்தும் எஜமான னும் தாங்களே.

எமக்கு எத்தனையோ ஆளு மைகளைக் கருவிலே திருவாகக் கொடுத்தும் நாமதை உயர்வாக மதிக்கவில்லையே. நீ தந்த விவேகத்தையும் அறிவையும் கொண்டு எதை யும் பகுத்துப்பார்க்கிறேம். ஆக ஆசானும் தாங்கள் தானே மனந்தளர்ந்து ஊச லாடும்போது கைகொடுக்கும் நண்பனும் விழுதுகள்போல் எம்மைத் தாங்கும் சேவகனுக வும் நின்னைமதிக்கிறேம். எமக் கோர் தெம்பும், புத்துணர் வும், வைராக்கியமும் தரும் ஊன்றுகோலும் நீதான் ஆயின் எமது அற்ப அறிவால் நாங் கள் கற்பிக்கும் உறவுகள், பாசங்கள், சேர்க்கைகள், வாத்ஸல்யம் எல்லாவற்றுக் கும் உனது ஆற்றலும் - அரு ளும் - கருணையுந்தான் அடித் தளம். உடலால் வேறுபடி னும்,உயிராலும் உள்ளத்தால் ஒரு தாய்க் குழந்தைகளே.

> **பொங்கல் சிந்தனை**

### சோதனை மேல் சோதனை

ஆயின் எஎலாவற்றையும் அளித்தபோதும்,எம்மிடம்சில பொறுப்புகளைச் சுமத்தியதால் நாம் தளர்கின்றே. மன்றே. எங்களுக்குச் சோதனை மேற் சோதனை. அப்பலப் பரீட்சை யில் நாமடைந்த பெறுபேறு வேதனைதானே. இதனற் திகைக்கிறேம்சோர்வடைகின் றேம். சபலமும் தட்டி விடு கிறது. எமக்கென உரிய சுய நலத்தால்; அதன் உயர்வு புரியாமல், தற்காப்பு என்ற பேதை மனத்தால், தற் காப்பை விடுத்து முனைப்பு மேலிட்ட நிலையில் துன்ப மெனுஞ் சேற்றிலே புதைந் தோம். ஆண்டாண்டு தோறும் நாமும் - நம் கீழ்க் கன்றுக ளும் இப்படியே நைந்தபாதை யில் நடப்பதா?

ஒருவரை ஒருவர் சுரண்டு கின்றேம், கீழ்மைப் படுத்துகி றேம்- அதட்டுகிறேம் பிறர் பொருளை வவ்வுகின்றேம். பகைக்கிறேம், மனச்சாட்சிக் கொலைக்குமஞ்சுகிறேமில்லை நீ கட்டியெழுப்பிய மோட்ச சாம்பிராஜ்யத்தை வெறும் பாலை நிலமாக்குகிறேம். மற்ற உயிர்க்குலங்கள் நேயத்தோடு வாழ நாம் மட்டும் வரண்டு போனேம்.

நாம் சுவாசிக்கும் வளிக்கு எப்பெயர் இருந்தாலும் நம்மை உயிர் வாழ வைக்கிற தல்லவா. நீரும் நெருப்பும் - நிலனும் - வானும் - நிலத்துப் பொருட்களும் எம்மொழியால் அழைக்கப்பட்டாலும் காய்த லுவத்தலின்றித் தம்மைத் தாபரிக்கின்றன தானே. அவை வேற்றுமை காட்டு கின்றனவா. வேற்றுமையில் ஒற்றுமை வெறும் வேஷமாகி றதே மனிதனுக்கு.

அதனல்தான் ஜீவராசிகள் எல்லாம் எம்மை அண்டப் பயப்படுகின்றன. நாம் மட் டும் ஒருவரையொருவர் வெறுக்கின்றேம்; பகைக்கின் றேம், ஒதுக்குகின்றேம். மன திலே ஒன்று. நாக்கிலே வேறு. செயலிலே இன்னும் வேறு. இதனற்றன் உலகெங்கும் யுத்த மேகங்கள் முழங்குகின் றன; நாம் வாழும் பூமி நரக லோகமாக் காட்சியளிக்கிறது.

எனவே தான் மனித முகங் களிலே மற்றெந்தப் பிராணி களுக்குமில்லாத கவலை ரேகைகள் படிந்து காணப் படுகின்றன. துன்பமயமான அவல ஓலங்களெங்கும் ஆக முழுமையான சமரச மனப் பான்மை இப் பொங்கல் புனித நாளில் எங்கும் நிறைந்து வழியட்டும்.

எமது சுய சிந்தனைத் தின் மையால் வழமையான ஒழுங் கால் ஒழுக்கத்தால் பண் பாட்டால் கண்ணேட்டத் தால் ஒப்புரவால் நாகரிகத் தால் பரோபகார சிந்தை யால் தயவுதாட்சண்யத்தால் ப்பில்லாத தன்னிழப்பால் ஒனமாசின்மையால் சுயநலத் ம தைப் போக்கடித்து நம்மை நாமே சுயாதீனப்படுத்தும் நாளாக இந்நாளைக் கொண் டாடுவோம். எல்லாவற்றை யும் நமக்குத் தெரியாத பொருளொன்றும் பின்னின்றி யக்கும் தன்மையொன்றே நீயென்பதை இனியாகிலும் எம்மை உணரவைப்பாய் இறைவா.

நாம் எல்லோரும் எல்லாப் பொருளையுஞ் சார்ந்து நிற்கி றேம். கொழுகொம்பு நாடும் கொடிபோல மனிதருக்கு நடுவே மனிதரோடு மனித ராகவே நாம் வாழவேண்டும். எம்மூதாதையரின் உதிரம் எம் நாடிநரம்புகளிலே பாய் கிறது. அவர்கள் தந்த சொத்துகளையே எமது மூல தனம் - முதுசொம் குணங் களும் - பண்புகளும் அவர் களோடு தொடர்புடையன. முன்னேரையும் பின்னேரை யும் தொடுக்கும் சேதுகட் டமே நாங்கள். முட்டி மோதிக்கொண்டு பாயும் பிர வாகத்தில் நாமோர் துளி மட் டுமே.

மண்ணிலோர்துகள் நாமோ முத்துச்சிற்பிகள் விலைமான முள்ளவர்கள் நாம் வலு விழந்த மனிதர்கள். எமது ஒய்யார நடை விகற்பமான யோசனைகள் எல்லாம் ஆண வத்தாலமையக்கூடாது. வள்ளலார்கைகளைக் கட்டியும் மெய்யறப் போர்த்தும் தலை குனிந்தும் நடந்து காட்டி னர்.

எப்படிப் பெருமை பீற்றி னலும் எவரும் காணுத மகா சமுத்திரத்தில் மறைந்து போகிறேம். எனவே வேண் டாத நான் எனது என்ற நிலைகளை நீக்குவோம். குரோ தங்களை உதறுவோம். மனித குலத்தின்மீது அன்பு - கருணை செலுத்துவோம். எமது சிந் தனைகள் - உணர்வுகள் எல் லாம் மனிதநேயத் தினடிப் படையில் ஜனசங்கியின் முழு மைக்கும் பற்றிப்படரட்டு மென்ற உறுதியுடன் பொங்கு வோம்.

சென்ற காலத்தின் பழுதி லாத்திறனும் நிகழ்காலத்தின் புன்முறுவலாய் எதிர்காலம் திகழட்டும். வெண்புருக்கள் வானத்தில் பறக்கட்டும். இதயச்சுமைகள் பொங்கலின் தணலிலே தகிக்கட்டும் என்ற சங்கீர்த்தனம் ஒலிக்கட்டும்.

சிறுமைகள் பொங்கி வழி யவும், வறுமைகள் வாடி வதங்கவும், சிந்தனை செழிக் கவும் வந்தனை செய்வோம் உலகமெங்கும். நேயமனப் பான்மை எற்புத்துளை தொறுஞ் செறியவும், இனி மையான வாழ்வு பிறக்கவும் கல்வியும் கலைகளும், செல்வ மும் ஓங்கி உயரவும் தெய் வீகமணங்கமழ காழ்ப் பென் னும் கல்லுகருப்பூரமாய் சமை யவும் எல்லாருக்கெல்லாம் பெருஞ்செல்வமும் பெற்றுப் பெருவாழ்வு வாழவும் எல் லாம் வல்ல பரம்பொருளையும் ஞாயிறையும் போற்றிப் பணிந்து எதிர்கால சுபீட்சம் எங்கும் பொலிய பொங் கலோ பொங்கலென வாழ்த்தி வணங்குவோமாக.

- முருக வே. பரமநாதன் -

## இன்பம் பெருகும் திருநாள்

மார்கழி போய் தைமுதல் நாள்
மலர்கின்ற திருநாள்
மனைகளெல்லாம் அலங்கரித்து
மகிழ்கின்ற நன்னுள்
பார் முழுதும் உழவர் புகழ்
பகருகின்ற பெருநாள்
பழையன போய் புதியனவாய்
பரவுகின்ற திருநாள்

கார் பொழிந்து கதிர் விளைந்து
களம் நிறையும் நன்னுள்
கரும்பு வாழை இஞ்சி மஞ்சள்
கலந்திணையும் பெருநாள்
ஏர் சுமந்து தோள் தளர்ந்தோர்
இடர் களையும் திருநாள்
எழுங்கதிரோன் வரவு போற்றி
இருந்த தமிழர் திருநாள்

துன்பங்கள் நீங்கி இன்பங்கள் பெருகும்
இதுவே தைத்திருநாள்.

—தி. தவபாலன்

## விடியலை நோக்கி புறப்படு!

உணவு கொடுத்து உயிர்காக்கும் - நம்,
உழவர்களுக்கு என வகுத்து வைத்த திருநாளே வருக!
பட்டுத் துணிபோல் பாதுக்காக்கப்பட வேண்டியவர்கள்
இவர்கள் - காலம்,
கைக்குட்டை போல் கசங்கிவிடுமா இல்லை!
உயிர்களுக்கு எல்லாம் விடிவைக் கொடுக்கும்,
உதய சூரியனே விடியலை நோக்கிப் புறப்படு!
உமைக்காண தமிழ் மக்கள் நீண்ட நாளாகக்
- காத்து இருக்கிறர்கள்
பொங்கல்திருநாளாம்! தைமாதத்தன்று உம்மைவாழ்த்தி,
வழிபடுவோமே நாமே!
ஆதவனே! உன் விரல்களை விரித்துக் கொண்டு,
விடியலுக்கு ஆயத்தமாகு!
சூரியனே உன்னுடைய புரட்சி;
வெடிப்பின் விளைவே இப் பூமி!
பொங்கிவரும் புது வெள்ளமாய்,
பொங்கல் தினத்தன்று ஆனந்தத்தில்
பொருமி இருக்கும் எம் மக்களைப் பார்!
''தை பிறந்தால் வழிபிறக்கும்'' என்பார்கள்;
தமிழ் மக்களின் வாழ்வு மலரட்டும்! என
வாழ்த்தி உமையும் நாம் வரவேற்கின்றேம்!

- யனுரவி

பூகொட தயாரிப்புக்களின்
வடமாகாண
ஏக மொத்த விற்பனையாளர்களாகிய
ராஜ்கோபால்ஸ் ஸ்தாபனத்தார்
தமது வாடிக்கையாளர்களுக்கு
இதயங்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கிறர்கள்.
திருமணப் பட்டுப் புடைவைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
★ ராஜ்கோபால்ஸ் ★
47, பெரியகடை, யாழ்ப்பாணம்.
(C/1261)




சிங்கரின் பராமரிப்புச் சேவை
உன்னதமானது. நம்பகமானது. தீவடங்கலானது.
விவசாய பிரிவு
சிங்கர்
மாசற்ற மேன்மை

வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும்
எமது
பொங்கல் நல்வாழ்த்துக்கள்
சன்லைற் றைக்கிளீனர்ஸ்
யாழ்ப்பாணம்.
தரமான போட்டோஸ்ரற் பிரதிகளைப்
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
சன்லைற் றைக்கிளீனர்ஸ்
[பஸ் நிலையம் முன்பாக]
யாழ்ப்பாணம்.
(C/1297)

உஷா தையல் மெஷின் தொடர்

டொமெஸ்டிக் டிலியூக்ஸ்
ரூ.பா 3850/-
எக்ஸெலா 30
30 வடிவமைப்பு அச்சுக்கள்
ரூபா. 5,850/-
சிக் சாக் எக்ஸேலா 55
55 வடிவமைப்பு அச்சுக்கள், சிக்சாக் தையல், அலங்காரத் தையல், பொத்தான் துளை தைத்தல், முதலியன,
ரூபா. 7650/-
சகல பாகங்களும் உலோக மெருகிடப்பட்டவை.
ஒரு வருட உத்தரவாதம் இலகு தவணை முறையிலும் வாங்கலாம்.
விநியோகத்தர்:
ஊஷா இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்
65, அத்திடிய றோட், ரத்மலானை.
தொலைபேசி: 71-6922, 71-7934, 71-7381
Mel Ads 9353

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org